898

REGISTERED No. M. 6165. ந. பை. 13

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஜூன் 1957

2 8 MAY 1957
MADRAS

விஷயம். பக்கம்.

ஹய்ய, அலல் பலாஹ் ... 1

திருக் குர்ஆன் சார சங்கிரஹம்
(ரஹ்மத் பாகவி) ... ... ... ... ... 9

இஸ்லாமிய சரித்திரச் சாரம்
(T. F. R. மஆலி ஸாஹிபு-பாகவி) ... ... 13

ஷாபிஈ மத்ஹபின் சிறப்புக்கள் ... ... ... ... 19

உடல் அமைப்பின் தத்துவம் (சிறுவர் பகுதி)
(டி. எப். ஆர். மஆலி ஸாஹிபு-பாகவி) ... 25

சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது
[illegible] துலக்கிய தூயவர் ... ... ... ... 29

[illegible] இஸ்லாம் ஆபீஸ் :
[illegible] ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

3L
Q7ᒧ211,N24FI
N57
187063

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு
வருஷ சந்தா ரூ. 1–50
தனிப் பிரதி நயா பைஸா. 13

மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.


புதிய இரண்டாம் பதிப்பு

## நபிநாயகத்தின் ஜீவிய சரித்திரம்.

(சீருவசனம்)

இச்சரிதை நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவதரித்தது முதல், வபாத்து வரையில் நிகழ்ந்துள்ள விஷயங்கள் யாவும் ஒன்று சேர்த்து அச்சிடப்பட்டது. இது டிம்மி 1-8 பேஜ் ஸைஸில் 1008-பக்கங்களில் பதிப்பித்து இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டது இதன் விலை ரூ. 8

ஷை அறபுத் தமிழ் அஷ்ஷஜரதுல் முஹம்மதிய்யா (ரஸூலுல்லாஹ்வின் சரிதை) இதன் விலை ரூ. 8

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

الإسلام

# பத்ஹுல் இஸ்லாம்

ஜூன்—1957.

## "ஹய்ய, அலல் பலாஹ்"

வாழ்க்கையில் வெற்றி பெறவேண்டாதார் யார்? ஜீவியத்தில் ஜெயத்துடன் வாழவேண்டும், அதன் பலனை அனுபவித்து இன்புற வேண்டு மென்பதே ஒவ்வொருவரின் அபிலாஷை யாகும்.

உலகத்தின் இயல்பில் எண்டிசையும் கண்கொண்டு நோக்குங்கள்; அறிவுகொண்டு ஆராயுங்கள். ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு பகுதியிலும், அரசாங்கங்கள் வெற்றிக் கொடி நாட்டி, விஜயவாழ்வு வாழவேண்டு மென்று விரும்பி உழைக்கின்றன. குடிஜனங்கள், தத்தம் தொழில் முறையிலும் வாழ்க்கை முறையிலும், ஜெயசீலர்களாய் வாழவேண்டுமென்றே விழைகின்றனர்.

நாடும் நாட்டு மக்களும் நலம் பெற்று, ஜயசீலர்களாய் சந்தோஷம் மிகுந்தவர்களாய் வாழவேண்டு மென்று அரசாங்கங்கள், ஐந்தாண்டு—பத்தாண்டு திட்டங்கள் வகுத்து, ஆக்க முறையில் பேருழியம் பல புரிந்து வருகின்றன.

அமெரிக்கா தேசமும் சரியே, ரஷ்யா நாடும் சரியே, மற்றும் சிறு நாடுகளும் சரியே, வெற்றி—வெற்றி என்றே சதா கோரிக்கொண்டிருக்கின்றன. ஆனல் அந்த வெற்றியை எப்படிப் பெறுவது?

எப்படி நடந்து கொண்டால் உண்மையான வெற்றி கிடைக்கும்? எது உண்மையான வெற்றி? அவ்வெற்றிக் குரிய உண்மையான—நேர்மை யான—சீர் அமைந்த பாதை எது? சன்மார்க்கம் எது? என்று எந்த நாடும் சீர்தூக்கிப் பார்த்து நடந்து கொள்ளவில்லை என்றே முடிவு கூறவேண்டி யிருக்கிறது.

ஆனால், எங்கள் சுத்த சத்திய சன்மார்க்கமாகிய தீனுல் இஸ்லாத் தின் ஆத்மிக வைதிக வாழ்க்கையில், மெய்யான வெற்றிக்குரிய பாதை காணப்படுகிறது! இதை உய்த்துணர்ந்து பார்க்கவும், இதன் பக்கல் விழைந்து வரவும், இஸ்லாம் மதம் தினமும் ஐந்து நேரம், பொதுவாக மக்களைக் கூவிக் கூவி அழைக்கின்றது:–

"ஹய்ய, அலல் பலாஹ்! ஹய்ய, அலல் பலாஹ்"

என்ற இனிய அரிய புனித ஒலி, அதோ மஸ்ஜிதின் உயரமான 'மினார்' என்னும் ஸ்தூபியிலிருந்து தண்ணெனக் கேட்கிறது, பாருங்கள்; கேளுங்கள்! ஆம், உலகிலுள்ள ஒவ்வொரு பள்ளிவாசல் (மஸ்ஜித்) தோறும் அதிகாலை பஜ்ரு நேரத்திலும், முற்பகல் லுஹர் நேரத்தில், பிற்பகல் அஸ்ரு நேரத்தில், மாலையில் மக்ரிபு நேரத்திலும், இரவில் இஷா நேரத்தில் ஆக ஐந்து நேரங்களிலும் 'முஅத்தின்' என்பார், உயரமான ஸ்தூபியில் (மேடையில்) நின்று, ஜனங்கள் எல்லோருக்கும் நன்கு கேட்கும்படியான விதத்தில்:

"ஏ ஜனங்களே, வெற்றியின் பக்கம் வாருங்கள்; வெற்றியின் பக்கம் வாருங்கள்."

என்று பாங்கொலி (அதான்) முழக்கி அழைத்துக் கொண்டே இருக்கின்றார்.

ஆம்! இஸ்லாமிய கட்டளைப்படி முஸ்லிம்கள் தொழுதுப் பிரார்த் தனை புரிய வேண்டிய ஐந்து நேரப் பாங்கு என்னும் புனித அழைப் பைத்தான் நாம் குறிப்பிடுகின்றோம். அதன் முழுவாசகக் கருத்துரை வருமாறு:—

"அல்லாஹ் மஹாப் பெரியவன்; அல்லாஹ் மஹாப் பெரியவன்"

"வணக்கத்துக்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை யென்று சாக்ஷியம் கூறுகிறேன்; வணக்கத்துக்குரிய

8063

இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை யென்று சாக்ஷியம் கூறுகின்றேன்.''

''நிச்சயமாக முஹம்மத்(ஸல்)அல்லாஹ்வுடைய திருத்தூதராய் விளங்குகிறார் என்றும் சாக்ஷியம் கூறுகின்றேன்; நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அல்லாஹ்வுடைய திருத்தூதராய் விளங்குகிறார் என்றும் சாக்ஷியம் கூறுகின்றேன்.''

''தொழுதுப் பிரார்த்திக்க (அனைவரும்) வாருங்கள்; தொழுதுப் பிரார்த்திக்க வாருங்கள்.''

''வெற்றியின் பக்கம் (எல்லாரும்) வாருங்கள்; வெற்றியின் பக்கம் வாருங்கள்''

''அல்லாஹ் மகாப் பெரியவன். வணக்கத்துக்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை.''

இவைதான் முஸ்லிம்களுடைய இஸ்லாமிய சம்பிரதாயத்தில் உலகமெங்கும் வியாபித்து இருந்து நிகழ்ந்து வரும் அரபு—பாங்கு வாக்கியங்களின் தாத்பரியமாகும். இதில் ''ஹய்ய அலல் பலாஹ்—ஹய்ய அலல் பலாஹ்'' (ஜெயத்தின் பக்கம் வாருங்கள்; ஜயத்தின் பக்கம் வாருங்கள்'') என்பது ஈங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இங்ஙனம், இஸ்லாம் மதம் தினம் ஐங்காலமும், சர்வலோக மக்களையும் எந்த விதமான வெற்றியின் பக்கம் அழைக்கிறது; எந்த வகையான ஜயத்தின் பக்கம் அழைக்கிறது என்பதை நாம் சிந்தித்து உணர்தல் வேண்டும்.

மனிதன் பொதுவாக எதை 'வெற்றி' என்று கருதுகின்றான்? இது அவனவன் மனப்பான்மைக்குத் தக்கபடியும், தன்னலத்தின் பிரகாரமும் முடிவு செய்யப்படுகிறது. ஒருவன், நிறைய பணம் காசு சேர்த்து வைத்துக் கொண்டு உல்லாசமாக வாழ்க்கை நடத்துவதையே வெற்றி (பலாஹ்) என்று கருதுகின்றான். இன்னொருவன் வீடு, வாசல், நிலம், புலன், சொத்து, செல்வம் இவைகளை சேமித்துக் கொண்டு பிரபுத்துவ வாழ்வு வாழ்வதையே வெற்றி (பலாஹ்) என்று எண்ணுகின்றான்; இன்னொருவன் கடை, தொழிற் சாலை, கார்யாலயம் முதலியன வைத்து, நல்ல முறையில் நடத்தி நிறைய லாபம் பெற்று,

பல்லோர் தன் ஆதிக்கத்தின் கீழ் பணிந்து நடப்பதைப் பார்த்துப் பெருமைப் படுவதையே வெற்றி (பலாஹ்) என்று எண்ணுகின்றான். இன்னொருவன், தன் நாட்டு மக்கள் எல்லோரும்—நாட்டு மக்கள் அனைவரும், தன் சொற் கேட்டு தன் கருத்துப்படி நடந்து தன்னைத் தலைவனாகவும் வழிகாட்டியாகவும் ஏற்றுக் கொண்டு, தன் கட்சியின் லக்ஷியப்படி நடந்து கொள்வதையே தனக்குக் கிடைத்த அரும் பெறும் வெற்றி (பலாஹ்) என்று எண்ணுகின்றான். இன்னொருவன் தன்னுடைய உபதேசங்களின்படியும் தான் காட்டும் ஞான மார்க்கப் படியும், தன் சிஷ்யகோடிகள் (முரீதீன்கள்), அபிமானிகள், அடி வருடிகள் எல்லோரும் இணங்கி நடந்து கொண்டால், அதுவே தான் கோரும் அரிய வெற்றி (பலாஹ்) என்று எண்ணுகின்றான். இன்னொருவன், தான் ஒரு தேசத்துக்கு அரசனாக யிருந்து அரியாசனத்தில் (சிம்மாஸனத்தில்) அமர்ந்து செங்கோலோச்சி, மந்திரிப் பிரதானிக ளெல்லோரும் தன்முன் தலை வணங்கி நின்று, தான் இடும் ஆக்ஞை நாட்டுக் குடி படை மக்கள் எல்லோரையும் கட்டுப் படுத்தி அரசாங்கம் (ஆட்சிமுறை) நடப்பதையே தனக்குரிய வெற்றி (பலாஹ்) என்று கருதுகின்றான்.

ஆனால் எம் பரிசுத்த தீனுல் இஸ்லாம், இத்தகைய வெறும் உலகம் சம்பந்தமான வெற்றி (காரியசித்தி) யின் பக்கம் தினம் ஐங் காலம் பாங்கொலி முழங்கி கூவிக்கூவி அழைக்கவில்லை. இஸ்லாமிய பாங்கொலி முழங்கும் 'ஹய்ய அலல் பலாஹ்' என்னும் வெற்றி, இகலோகத்தின் அழிந்து போகும் (பனாவாகும்) வெற்றி யல்ல. ஆனால் அது சாஸ்வதமாய், பரமலோகத்தில் நிலைத்திருந்து, முடிவுறாத ஆனந்தத்தையும், மோக்ஷ சாதனத்தையும், சாந்தி மயமான சந்தோஷத்தையும், ஊழிஊழி காலம், அப்பரம கருணாகர னாகிய ஆண்டவன் திருச் சன்னிதானத்தில் அளித்தாதரிக்கும் ஆத்மார்த்தமான வெற்றி (பலாஹ்) ஆகும்.

இத்தகைய பாரமார்த்திக பரம ஜெயத்தை பெற்று, இறையருள் அடைந்து சுவர்க்க பாக்கியம் பெற்றுத் திகழ்ந்து, சர்வ சதா காலம் ஆனந்த வாரிதியில் மூழ்கி யிருப்போரை, எமது பரிசுத்த திருக் குர்ஆன் வேதமானது "முப்லிஹூன்" (ஜெய சீலர்கள்) என்று குறிப்பிடுகிறது.

(1) ஹய்ய அலல் பலாஹ்

(2) கத் அப்லஹல் மூமினூன்...

(3) உலாயிக்க ஹுமுல் முப்லிஹூன்...

(4) கத் அப்லஹ மன் ஜக்காஹா...

முதலிய திருவாக்கியங்களில், பிரஸ்தாப 'பலாஹ்' (ஜெயம்) சுட்டிக் காட்டப் படுகிறது. அந்த மெய்யான வெற்றி என்னும் ஜெயசீலம் (பலாஹ்) எப்படி கிடைக்கும்? அதற்காக என்ன செய்ய வேண்டும்? என்ன அமல் அனுஷ்டிக்க வேண்டும்? என்னென்ன செய்ய வேண்டும்? இதனை எம் திருவேதமாகிய திருக் குர்ஆன், பல இடங்களில் பல தோரணைகளில் எடுத்துரைக்கின்றது :—

(1) அலிப்-லாம்-மீம்! இந்த வேதம், பக்தி யொழுக்கஸ்தர்களுக்கு நல்லதோர் வழிகாட்டி என்பதில் சந்தேகமே இல்லை. அவர்கள் எப்படிப் பட்டவர்களென்றால், (இறைவன், சுவர்க்கம், நரகம், பரலோக நியாயம், பலாபலன் முதலிய) மறை பொருளைக் கொண்டு நம்பிக்கை (ஈமான்) கொள்வார்கள். (தினம் ஐங்காலமும்) தொழுகையை நிலை நிறுத்தி (பிரார்த்தனை புரிந்து) வருவர். (இறைவனாகிய) யாம், (லோக பாக்கியமாய்) கொடுத்த (பணம் காசு உணவு) பொருளிலிருந்து (ஏழை எளியோர்களுக்குத் தானமாய்) செலவு செய்வார்கள். இன்னும் (ஏ நபியே,) நாம் உம் மீதும், உமக்கு முன் வந்து போன நபிமார்கள் மீதும் இறக்கிய வேதக் கட்டளைகள் மீதும், இறுதிநாள் (நியாயத்தீர்ப்பு அவரவர்களில், செயல்களுக்குரிய பலாபலன்) உண்டென்பதின் மீதும் நிச்சயங் கொள்வார்கள்; இப்படிப்பட்டவர்கள் (உண்மையான) சன்மார்க்கத்தின் மீது ஒழுகிவருபவர்கள், இவர்கள் தான் (வாஸ்தவமாக வெற்றி பெற்ற) முப்லிஹூன் (ஜெயசீலர்கள்) ஆவர். (குர்ஆன்: ஸூரா-பகரா ஆரம்பம்.)

(2) நிச்சயமாக (நன்னம்பிக்கை கொண்டுள்ள) மூமின்களே வெற்றி பெற்றவராவர். அவர்கள் (இன்னும்) எத்தகையவர்களெனின்: தாங்கள் தொழுகை(ப்பிரார்த்தனைகளில்) பரவசமடைந்து (குஷூஆக) இருப்பர். இன்னும் வீணான பேச்சுவார்த்தை (வசை மொழி)களை விட்டும் முகந்திருப்பி (ஒதுங்கி) இருப்பர்; இன்னும் தான தர்மம் புரிவதில் (நற்) செயல் புரிந்து கொண்டிருப்பர்; இன்னும்

(பாபகாரியங்களைவிட்டும்) தம் மர்மஸ்தானங்களைப் பாதுகாத்துக் கொள்வர்.........இன்னும் தாங்கள் அமானத்து(ப்பொறுப்புக்) களையும், வாக்குறுதிகளையும் (ஒப்படைத்தும்) நிறைவேற்றியும் நிர் வாகம் செய்வர். இன்னும் அவர்கள் தங்கள்(ஐங்காலத்)தொழுகைகளை நிறைவேற்றுவதில் மிகப் பாதுகாப்பாக இருப்பர். இப்படிப்பட்ட வர்கள்தான் (பரலோக சாம்ராஜ்யத்துக்கு வாரிசுதார்களாவர்;) இவர் களே, பிர்தவ்ஸ் (என்னும் சுவர்க்க) பாக்யத்தை யடைந்து, அதில் சதா காலம் நீடித்து நிலைத்து (இன்புற்றுக் கொண்டு) இருப்பர். (குர்ஆன்: ஸூரா-அல்மூமினூன் ஆரம்பம்)

அன்பர்களே, இஸ்லாமிய அபிமானிகளே! பலாஹ் என்னும் மெய்யான—பரம ஜெயசீல பாக்கியம் பெற்றுய்வதற்கு, சுத்த சத்திய திருவேதக் குர்ஆன் எடுத் தியம்பும் அரிய அம்சங்களைக் கண்டுணர்ந்து கொண்டு, நல் அனுஷ்டானம் புரியுங்கள். இத்தகைய, இஸ்லாமிய பரலோக சாம்ராஜ்ய வெற்றிக்கு, அரசாட்சி வேண்டியதில்லை; அதிகாரம் வேண்டியதில்லை; பணம் காசு செல்வம் வேண்டியதில்லை; அயல்நாட்டு உறவு வேண்டியதில்லை; பகைநாட்டின் பயம் வேண்டிய தில்லை; குண்டு, துப்பாக்கிகள் வேண்டியதில்லை; ஆகாயவிமானங்கள் அவசியமில்லை; கப்பற்படைகள் வேண்டியதில்லை; அணுக்குண்டுகள் அவசியமில்லை; நாகாரச் செயல்கள் தேவையில்லை.

'பலாஹ்' என்னும் மோக்ஷ சாம்ராஜ்ய வெற்றி பெறுவதற்கு, மூதன் முதல் வேண்டியது 'மனப்பரிசுத்தம்' ஆகும். இதையே ஏக இறைவனாகிய அல்லாஹு தஆலா "கத் அப்லஹ மன் ஜக்காஹா" (எவன் தன் மனதை (வாழ்வை) பரிசுத்தப் படுத்திக் கொண்டானோ அவனே வெற்றி பெற்றவனாவன்) என்று திருப்போதனை புரிந் துள்ளான்.

இஸ்லாத்தின் நற்போதனைகளின்படி நடந்து கொள்ளும் எல் லோருக்குமே, பொதுவாக இந்த வெற்றி (பலாஹ்) உண்டு. பரம ஜெயசீலர்களாக விளங்க, இஸ்லாமிய மக்களுக்கு அருளப்பட்டுள்ள ஒரு சுலபமான வழி "அஸ்ஸலாத்" என்னும் தினம் ஐங்காலத் தொழுகையே யாகும். எனவே, ஒருவன் சுப்ஹு என்னும் அதிகாலை யிலும், லுஹர் என்னும் முற்பகலிலும், அஸர் என்னும் பிற்பகலி லும், மக்ரிப் என்னும் மாலையிலும், இஷா என்னும் இரவு நேரத்தி

னும் பள்ளிவாசல் சென்று, கைகால் முகம் சுத்தம் செய்து (ஒுவு செய்து), இதர முஸ்லிம் சகோதரர்களாகிய இமாம் ஜமாஅத்தோடு சேர்ந்து 'அஸ்ஸலாத்' என்னும் தொழுகையை (நமாஜை) நிறை வேற்றி வருவானுனல், அவன் சகல பாபகாரியங்களை விட்டும், தீய சிந்தனைகளை விட்டும் பரிசுத்தம் அடைந்து, எல்லாம் வல்ல இறைவனின் நல்லருளுக்குப் பாத்திரமாகி, 'பலாஹ்' என்னும் 'ஜெயசீலம்' பெற்று, இகபர நலம் பெற்றுய்வா னென்பதில் சந்தேக மில்லை.

முஸ்லிம் சோதரீர்! இனி பள்ளிவாசல் மினரா (மேடை) யிலிருந்து, முஅத்தினர் என்னும் 'ஒலியாளர்' பாங்குச் சொல்லுங் கால்—

"ஹய்ய அலஸ் ஸலாத்,
ஹய்ய அலல் பலாஹ்"

என்னும் சொல்லை ஒலிக்கும்போது, அதில் எத்துணை அரிய பொருளும் தத்துவமும், ஆத்மார்த்த அழைப்பும், வெற்றி முழக்கமும் நிறைந்திருக்கிற தென்பதை ஓர்ந்து பாருங்கள்: வாழ்க, இஸ்லாம்! ஓங்குக பாங்கொலி; பெறுக இவ்வையகம் பலாஹ் என்னும் ஜெய சாதனம். வஸ்ஸலாம்.

# பத்ஹுர் ரஹ்மான்
# பில்பிக்ஹின் னு:.மான்

(ஹனபி மதுஹபுக்குக்குரியது)

பிரயோஜனமான கல்வி, பிரயோஜன மில்லாத கல்வி என்று இரண்டு வகை யுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்துச் சொல்வது பிரயோஜன மில்லாத கல்வி. நம் மனமும் ஒழுக்கமும் சீர்பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக் கூடியதே பிரயோஜனமான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்க முறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையும் கற்றறிந்து அமல் செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமையாகும். இதுதான் இம்மை, மறுமை இரு லோகத்திலும் பிரயோஜனம் தரவல்லது.

இந்நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுக வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதாரணமாக ஈமான், இஸ்லாம், கலிமா, பரிசுத்தம், தொழுகை, ஜும்ஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கம், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம், இபாதத்தின் மகிமை மற்றும் சகலவிதமான போதனைகளும் அடங்கி யிருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல்—புதிய பதிப்பு. ஆங்கு அரபு மொழியில் ஓத வேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அறபிலேயும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியும். இதன் விலை ரூ. 3

ஷை அறபுத் தமிழ் அல்பத்ஹுர் றப்பானி-பி-பிக்ஹே நிஃமானி விலை ரூ. 5

---

கிடைக்குமிடம் :—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

(29-வது பகுதி)

# திருக் குர்ஆன் : : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

## இப்ராஹீம் நபியை அக்கினி தீண்டவில்லை.

(இப்ராஹீம் நபி, காபிர்களின் விக்கிரஹங்களை உடைத்து கீர்த்திப் படுத்தியதால், ஆத்திரம் கொண்டனர் காபிர்கள்). எனவே அவர்கள் (தம் முக்கியஸ்தர்களை நோக்கி) "நீங்கள் ஏதேனும் இதற்கு(ப் பரிகாரம்) செய்தாக வேண்டுமானால் இப்ராஹீமை நெருப் புக் குண்டத்தில் போட்டு (எரித்து) விடுங்கள்" என்று (ஏகோபித் துக்) கூறினார்கள். (அதன்படி காபிர்கள் எல்லோரும் சேர்ந்து பெரிய நெருப்புக்குழி வளர்த்து, அதில் இப்ராஹீம் நபியைப் பிடித் துத் தள்ளிவிட்டனர்.) அச்சமயம் (இறைவனாகிய) யாம், அந்த நெருப்புக்கு (இவ்வாறு) உத்தரவு பிறப்பித்தோம். (அதாவது:-) "ஏ அக்கினியே, இப்ராஹீமுக்காக நீ, குளிர்ந்து (தணிந்து) விடுவா யாக; மேலும் அவரது க்ஷேம(த்துக்கு) சாதனமாய் விடுவாயாக" (இவ்வாறே நிகழ்ந்தது.) அந்த(க்காபிர்) ஜனங்கள், (நபி) இப்ராஹீ முக்கு துரோகம் புரியவும் (தீங்கு செய்யவும்) நினைத்தார்கள். (இறைவனாகிய) யாம், அவர்களுக்கே அபஜயத்தை (ஏமாற்றத்தை) உண்டாக்கி விட்டோம். மேலும், (நபி) இப்ராஹீமையும் (நபி) லூத்தையும் (அவர்களுடைய அதர்மக் கூட்டத்தாரின் தீங்கை விட்டும் இங்ஙனம்) காப்பாற்றி, நாம் எந்த பூப்பிரதேசத்தில் சர்வ லோகத்தாருக்கும் பரக்கத்தை (சலாமத்தை) உண்டாக்கியிருந் தோமோ, அங்கு (அதாவது 'கன்ஆன்' என்னும் அரபு நாட்டுக்கு) அனுப்பிவைத்து விட்டோம். மேலும், (அதனூடே) யாம் இப்ராஹீ முக்கு (புத்திரனாக) இஸ்ஹாக்கையும், (பேரனாக) யாகூபையும் சன்மானமாக கொடுத்தருளினோம். மேலும், இவர்க ளெல்லோரையும் நற்பாக்கிய சாலிகளாக்கி வைத்தோம். (ஜுஸு: இக்தரப; ஸூரா: அன்பியா; ருகூ. 5)

## தாவூத் நபிக்கு மலைகளும் பட்சிகளும் இணங்கி இருந்தன.

(இறைவனாகிய) யாம், மலைகளை (நபி) தாவூதுக்கு இணங்கும் படியானதாகச் செய்து தந்தோம். அவை, இவரோடு இணைந்து (இறை வனுடைய) 'தஸ்பீஹை' கூறிக் கொண்டிருந்தன. இதேவிதமாக பட்சி இனங்களையும் (அவருக்கு இணங்கினவாகச்செய்து தந்தோம்.) இதனை (அற்புதமாக உலகத்தாருக்கு) செய்து காண்பிப்பவர் (இறை

வணங்கிய) யாமாக இருந்தோம். மேலும் யாம் (நபி) தாவூதுக்கு, உங்களுடைய (போர்க்கால) உபயோகத்துக்கான ஒரு (வகை இரும்பு) உடையை, தயார் செய்யவும் கற்பித்துக் கொடுத்தோம்; இதனால் நீங்கள் போர்க்களத்தில் உங்களை நீங்கள் தற்காத்துக் கொள்கிறீர்கள். (ஏ ஜனங்களே, எமது இந்த உபகாரங்களுக்காக) நீங்கள் நன்றி செலுத்தவேண்டுமே. (ஜுஸ்உ இச்தரப; ஸூரா: அன்பியா; ருகூ: 6)

## ஸுலைமான் நபிக்கு காற்றும் பூதங்களும் வழிபட்டன.

இறைவனாகிய நாம், சுழற்காற்றை ஸுலைமான் (நபி)க்கு, வசப்படுத்தித் தந்தோம். அது அவருடைய கட்டளையின்படி (திசைமாறி) அந்த (ஷாம்) தேசத்தின் பக்கம் வீசிச் சென்றது. அதன் பொருட்டால் (மழைப் பொழிவால்) அங்கு (விதவிதமான தானியங்களையும் கனிவர்க்கங்களையும்) உண்டாக்கி, பர்க்கத்தாக்கி வைத்தோம். இவ்வாறான நிகழ்ச்சிகளைப் பற்றி யெல்லாம் (முற்கூட்டியே) யாம் அறிந்திருந்தோம். மேலும் யாம்(சுலைமான் நபிக்கு பூதங்களான) ஜின்களையும் வசப்படுத்திக் கொடுத்தோம். எனவே, ஜின்களில் சில, (நபி) ஸுலைமானுக்காக, சமுத்திரத்தினுள் மூழ்கி (முத்து, பவளம், முதலியன எடுத்து) வருபவையாக இருந்தன. இதல்லாமல் (ஜின்களின்) சில, வேறு (முக்கிய) வேலைகளையும் (சுலைமான் நபிக்கு) செய்யக்கூடியனவாய் இருந்தன. இங்ஙனம் ஜின் (பூத) வர்க்கத்தை, (ஸுலைமான் நபிக்கு) வசப்படுத்தி (இணங்கவைத்து)க் கொடுத்தது (இறைவனாகிய) நாமேதான். (ஜுஸ்உ: இக்தரப; ஸூரா அன்பியா; ருகூ: 6)

## நோயால் வாடிய அய்யூப் நபிக்கு புனர் ஆரோக்கியம் கிடைத்த விதம்.

(ஹஜ்ரத் நபி அய்யூப் அலைஹிஸ்லாம், சுக செல்வத்தோடு ஆரோக்கியமாய் வாழ்ந்து வந்தார்கள். அல்லாஹு தஆலா, அவரது தெய்வப் பற்றையும் 'ஸப்ரு' என்னும் பொறுமையையும் சோதிப்பதற்காக, அவர்கட்குப் பல கஷ்ட நஷ்டத் துன்பங்களை உண்டாக்கினான்; சொத்து செல்வம் போயிற்று; மக்களை இழந்துவிட்டார்கள்; நோய் கொடியில் வாடினர்; உடலை, குஷ்டநோய் பீடித்து வாட்டியது; உடலெல்லாம் புண்ணாகி, புழுக்கள் நெளிந்து கொண்டிருந்தன. எனினும் அய்யூப் நபி, இறைவனை மறக்க வில்லை; பொறுமையை கைவிடவில்லை. இதை திருக் குர்ஆன் பின்வருமாறு பிரஸ்தாபிக்கிறது:—)

**"ஏ (முஹம்மத்) நபியே அய்யூபைப் பற்றி (ய நிலையை) நினைத்துப் பார்ப்பீராக: அவர், தம் இறைவனை (க்கூவி) அழைத்துப் பிரலாபிக்கலானர். (அதாவது:) "ஏ இறைவனே, என்னை(ப் பயங்கரமான குஷ்ட) வியாதி பீடித்துக்கொண்டு விட்டது. நீயோ, கருணைப் புரிபவர்களி லெல்லாம் மகாக் கருணை புரிபவனாக இருக்கின்றாய்.**

(என் மீது) கருணை புரிந்து, என் துன்பத்தைப் போக்குவாயாக" எனவே, இறைவனாகிய யாம், அவரது கூப்பாட்டை கேட்டு (அவரது பிரார்த்தனையை ஒப்புக்) கொண்டோம். (உடனே) அவரது (குஷ்ட) வியாதியைப் போக்கி விட்டோம். மேலும், (துன்பத்தால் இறந்து மாண்டு போயிருந்த) அவரது பிள்ளைகளையும் (மீண்டும் உயிர்ப்பித்து) அவருக்கு அளித்து விட்டோம். அத்துடனே அவருக்கு (நல்ல ஆரோக்கியமும் சுக செல்வமும் தந்து) அபரிமிதமாக கிருபை புரிந்தோம். (இவ்வரலாற்றால்) வணக்கம் புரியும் அடியாருக்கு, நல்லுப தேசம் படிப்பினை இருக்கிறது. மேலும் ஏ (முஹம்மத்) நபியே, இஸ்மாயீல் (நபி), இத்ரீஸ் (நபி), துல்கிப்லு (நபி) ஆகியோருக்கு நாம் அருள்பாலித்தவைகளையும் நினைத்துப் பாருங்கள்; இன்னோர் நற்பாக்கிய சாலிகளாக இருந்தனர். (ஜுஸு: இக்தரப; ஸூரா: அன்பியா; ருகூ: 6)

## ஸுலைமான் நபியின் படைக்கு எறும்புகளும் பயந்தன

(இறைவனாகிய) யாம் (நபி) தாவூதுக்கும் (நபி) ஸுலைமானுக்கும், ஒரு (விசேஷமான) அறிவு ஆற்றலை அளித்திருந்தோம். எனவே அவ்விருவரும் (சந்தோஷப்பட்டு) புகழ்வதாயினர். (அதாவது:—) 'இறைவனுக்கே நன்றி செலுத்துவோம். அவன் நம்மவரை, தன் பக்தி யொழுக்கமுள்ள மற்ற அடியார்களைவிட (சில அருட் பாக்கியங்களைக் கொண்டு) சிறப்பாக்கி வைத்துள்ளான்.

பிறகு, (நபி) ஸுலைமான் (சகல சௌபாக்கியமும் அதிகாரமும் பெற்று), (நபி) தாவூதுடைய பிரதிநிதியாய் அரியாசனத்தில் அமர்ந்தபோது, (பிரஜைகளை நோக்கி) "ஏ ஜனங்களே, (எல்லாம் வல்ல இறைவனருளால்) எமக்கு பட்சிகளின் (ஜீவ ஜந்துக்களின்) பரிபாஷை கற்பிக்கப் பட்டிருக்கிறது. எமது சகல விதமான சௌகரியங்களும் (அதிகாரங்களும்) அளிக்கப் பட்டிருக்கின்றன. நிச்சயமாக இஃதெல்லாம் (இறைவனின்) அருட் பாக்கியங்களே யாகும்" என்று போற்றினார்.

பிறகு, (நபி) சுலைமானுடைய (படை பரிவாரங்களும்) ஜின் (பூத) கணங்களும், மனிதர் படைகளும், பட்சி (ஜந்து) கூட்டங்களும் ஒருங்கே சேகரிக்கப் பட்டன. எனவே, அவை இனம் வாரியாக, (தனித்தனியே பெரும் அளவில் அணி வகுத்து) நிறுத்தி வைக்கப்பட்டன. (இங்ஙனம் அணிவகுக்கப் பட்டபின், படைகள் நகர்ந்து செல்லலாயின.) அங்ஙனம் படைகளெல்லாம், எறும்புகள் வசிக்கும் ஒரு மைதானத்தை நோக்கிப் போன போது, ஒரு எறும்பு (ராணி), தன் (குடி படை)களைப் பார்த்து) "ஏ எறும்பு இனங்களே! (அதோ சுலைமானுடைய படைகள் வருகின்றன.) நீங்க ளெல்லோரும் உங்கள்-உங்கள் வீடுகளில் (வளைகளில்) நுழைந்து கொள்ளுங்கள். இன்றேல் (மமதை கொண்ட) அந்த சுலைமானுடைய காலாட் படைகள்

உங்களை மிதித்து நசுக்கிப் போடலாம்; நம் (பலஹீனமான) நிலை அவர்களுக்கு என்ன தெரியப் போகிறது'' என்று கூறி எச்சரித்தது.

(சுலைமான் நபிக்கு எறும்புகளின் பரிபாஷை தெரிந் திருந்ததால்) சுலைமான் நபி, எறும்புகளின் பேச்சைக் கேட்டு, சிரித்தார்; (சிரித்து விட்டு) மேலும் (இறைவனிடம்) சொன்னதாவது: "ஏ என்னுடைய இரக்ஷகனே! என் மீதும் என் பெற்றோர்கள் மீதும் நீ செய்திருக்கும் அருட் கொடைகளுக்கு நன்றி செலுத்தும்படியான பாக்கியத்தை எங்களுக்கு அருள் புரிவாயாக. மேன்மேலும் நான் நன்றி செலுத்தி (உன்னை வணங்கி) நீ என்பால் மேலும் சந்தோஷப்படும்படி சந்தர்ப்பத்தை யளிப்பாயாக. மேலும், (ஜீவிய கால மெல்லாம்) நான் நல்ல காரியங்கள் புரிய அருள் புரிவாயாக. மேலும் எனது இரக்ஷகனே! உன் (ரஹ்மத் என்னும்) பேரருளால் என்னை உன்னுடைய நல்லடியார்களில் சேர்த்து கொள்வாயாக'' என்பதாகும். (ஜுஸ்உ: வகாலல்லதீ; ஸூரா; அந்நமல்-ருகூ: 2)

10-வது பதிப்பு வெளிவந்து விட்டது.




சொற்ப பிரதிகளே கைவசமுள்ளன !!!

இந்த கிதாபின் மஹிமையைப் பற்றி நாம் அதிகமாய் எழுத வேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில், இது ஜனாப் காதிப் முஹம்மத் யாஸீன் ஸாஹிபு அவர்களால் கோர்வை செய்யப்பட்டு எல்லா தேசங்களிலும் பரவி பிரசித்தமாகி இதுவரையில் லக்ஷக்கணக்கான முஸ்லிம்களும் நவ்முஸ்லிம்களும் தொழுகையை பற்றியும் மார்க்க விஷயங்களும், தமிழிலேயே தனக்குத்தானாக இலேசில் கற்றுக்கொண்டு தொழுவாளிகளாய் விட்டார்கள்.

அறபு, பார்ஸீ, உர்து, படிப்புகள் தெரியாமல் சொற்ப தமிழ் தெரிந்தவர்களும் தமிழிலேயே, தனக்குத்தானாக இலேசில் கற்றுக் கொள்ளும்படி தொழுகையில் ஓதுவதற்குறிய 21 ஸூராக்களும் ஓதவேண்டிய ஓதல்களும், 130 பர்ளுகளின் விபரமும், வாஜிப், சுன்னத் முஸ்தஹப் முதலானவைகளும், பலா, பேய், பிசாசு, முதலியவை நீங்கவும், எண்ணங்கள் கைகூடவும் அனேகவித துஆக்களும் அமல்களும் இன்னும் அநேக நஸீஹத்துகளும், தமிழிலும், அரபிலும் எழுதப்பட்டிருக்கிறது.

இந்த கிதாபு தமிழ் மட்டில் தெரிந்த ஒவ்வொரு முஸ்லிம்களுக்கும் மிகவும் அவசியமானதாகும். அழகான பைண்டு செய்தது. இதன் விலை ரூபா. 3 (தபால் செலவு வேறு)

கிடைக்குமிடம் :— **கே. எம். யாஸீன் அண்டு ஸன்.**
பேர்ணம்பட்டு போஸ்டு. (வடஆற்காடு ஜில்லா.)

# இஸ்லாமிய சரித்திரச் சாரம்.

## ஹிஜ்ரீ 101–லிருந்து 150–வரை.

(டி.எப். ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)

### ஹிஜ்ரீ 115.

(1) இவ்வாண்டு கலீபா ஹிஷ்ஷாம் அவர்கள், அப்துல்லாஹ் பின் ஹிஜாபை, ஆப்ரிக்கா தேசத்திற்கு ஹாக்கிம் என்னும் அதிகாரியாக நியமித்து அனுப்பி வைத்தார். இந்த மாவீரர், சூடான் பிரதேசத்தில் பற்பல ஊர்களைப் பிடித்து இஸ்லாமிய வெற்றிக் கொடியை நிலைநாட்டினர்.

(2) கலீபா ஹிஷ்ஷாமின் இரண்டு அரும் புத்திர சிகாமணிகளாகிய முஆவியாவும், ஸுலைமானும், வீரப் போர் தொடுத்து, அடங்காப்பிடாரிகளான ரோமர்களை இவ்வாண்டு அடக்கி வைப்பதில் வெற்றி பெற்றார்கள்.

(3) இவ்வாறே குராஸானின் இஸ்லாமிய அதிகாரி, வீரப் பிரயத்தனம் புரிந்து அடக்கப்படா திருந்த முரடர்களான துருக்கியர்களை அடக்கி வைப்பதில் வெற்றி பெற்றார்.

### ஹிஜ்ரீ 116.

பாரா (பன்னிரு) இமாம்களில் ஒருவரான ஹஜ்றத் இமாம் பாகிர் (ரஹ்) அவர்கள், மதீனா முனவ்வரா நகரில், தமது 59-ம் வயதில் வபாத்தாகி இறந்து போனார்கள். இப்பெரியாரின் சடலம், ஜன்னத்துல் பக்கீஃ என்னும் பூங்காவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### ஹிஜ்ரீ 117.

(1) தாபியீன்களில் ஒருவரும் பிரபல ஆலிம்களில் ஒருவருமான ஹஜ்றத் அப்துல்லாஹ் பின் உபைதுல்லாஹ் (ரஹ்) அவர்கள், இவ்வாண்டு இறந்து போனார்கள்.

(2) தாபிஈன்களில் ஒருவரும் அப்துல்லாஹ் பின் உமர் அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையா யிருந்தவருமான நாபிஃ பின் ஸர்ஜர் அவர்கள் இவ்வாண்டு இறந்து போய்விட்டார்கள்.

### ஹிஜ்ரீ-118.

(1) இவ்வாண்டு ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு முபாரிக் (ரஹ்) அவர்கள் பிறந்தார்கள்.

(2) இமாம் அவ்ஜாயீ என்று இஸ்லாமிய சரிதையில் மிகப் புகழ் பெற்றுள்ள மக்ஹூல் பின் அப்துல்லாஹ் அவர்கள் இவ்வாண்டு இறந்துபோய் விட்டார்கள்.

## ஹிஜ்ரீ-119.

கைஸ் பின் முஸ்லிம் அவர்கள், கூபாவில் வாழ்ந்த பெரியாரும் மாண்புமிக்க 'இல்மு' காரரும் 'தாபிஈன்' களில் ஒருவருமாவர். இப் பெரியார் இவ்வாண்டு இறந்துவிட்டார்கள்.

## ஹிஜ்ரீ-120.

(1) ஹம்மாத் பின் அபூ ஸுலைமான் அஷ்அரீ (ரஹ்) அவர்கள் இவ்வாண்டு இறந்து போனார்கள். இப்பெருந் தகையாரும், கூபா வாசியும் தாபிஈனுமாவார்.

(2) மிகப் பெரும் வலியுல்லாஹ் வாகிய மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் இவ்வாண்டு இறந்து போனார்கள்.

## ஹிஜ்ரீ-121.

ஹஸன் பஸரி (ரஹ்) அவர்களுடைய சத்திய சிஷ்யர் (முரீதே ஸாதிக்) ஹஜ்ரத் ஹபீப் அஜமி (ரஹ்) அவர்கள், இவ்வாண்டு இறந்து போனார்கள். இப்பெரியார் மாபெரும் ஞானியாக (காமிலாக) விளங் கினார்கள்.

## ஹிஜ்ரீ-122

(1) இவ்வாண்டு கலீபா ஹிஷ்ஷாமுக்குப் பல வெற்றிகள் கிடைத்தன; பல காரியங்கள் சித்தியாயின. எனவே அவரது அதிருஷ்டச் சக்கரம் நன்றாய் சுழன்று கொண்டிருந்த தென்று சொல்லலாம்.

(2) அந்துலுஸ் நாட்டு முஸ்லிம்கள், இரண்டாம் முறை பிரான்ஸ் தேசம் மீது படை யெடுத்துச் சென்றார்கள். இதில் வெகு தூரம் முன்னேறிச் சென்றனர்...

(3) இவ்வாண்டு ஸூஸ், அக்ஸா, சூடான், ஸலீகா முதலிய தேசங்களை, முஸ்லிம்கள் வென்று ஆங்காங்கு இஸ்லாமிய பிறைக் கொடியை நிலை நாட்டினார்கள்.

## ஹிஜ்ரீ-123.

(1) வட ஆப்ரிக்காவில் பர்பரீஜாதியினர், இஸ்லாமிய ஆட்சிக்கு விரோதமாய்ப் புரட்சியை ஆரம்பித்துப் போராட்டம் புரிந்து 'தன்ஜா' என்ற இடத்தை கைப்பற்றிக் கொண்டனர். எனவே, கலீபா ஹிஷ் ஷாம் அவர்கள், அப்போது ஆப்ரிக்காவின் கவர்னராக (அதிகாரி யாக) இருந்துவந்த இப்னு ஹிஜாப் என்பவரை அவ்வுத்தியோகத்தி லிருந்து விலக்கிவிட்டு, குர்ஸூம் பின் இயாலு என்பவரை புது அதிகாரியாக நியமித்து வைத்து, 30,000 படைகளையும் அவருடன் ஒப்படைத்து அனுப்பிவைத்தார். அதிகாரி குல்ஸூம், தன்ஜா என்ற பிரதேசத்தின் மீது படையெடுத்துச் சென்றாராயினும் தோல்வி யையே கண்டார்; துரதிஷ்டவசமாக அப்போராட்டத்தில் கொல்லப்

பட்டு ஷஹீதானர். புரட்சி செய்து சக்தி பெற்றிருந்த பர்பரி ஜாதியினர், 'கிர்வான்' என்ற பிரதேசத்தையும் அதிகமாய் பிடித்துக்கொண்டனர்.

(2) மரித்துப்போன குல்ஸூமுக்குப் பதிலாக 'ஹன்ஜலா' என்பவர் ஆப்ரிக்காவின் புது அதிகாரியாக (கவர்னராக) நியமிக்கப்பட்டார். இவர், தம் போர்த் திறமையினால், புரட்சிக்கார பர்பரி ஜாதியினரை நன்றாக உதைத்து, அவர்களில் முக்கியஸ்தர்களை கொன்று போட்டார்.

(3) இஸ்லாமியப் பெரியோர்களில் ஒருவராக விளங்கி வந்த ஹஜ்ரத் ஸம்மாக் பின் ஹரப் (ரலி) அவர்கள் இவ்வாண்டு இறந்து போய்விட்டார்கள்.

## ஹிஜ்ரீ-124.

(1) ஸாதாத்களில் ஒருவரான இமாம் ஜைத் பின் அலி இப்னு ஹுஸைன் (ரலி) அவர்கள், உமவிகளுக்கு (உமய்யாக்களுக்கு) விரோதமாகப் புரட்சியை எழுப்பினர். உமவிய்யாக்களின் சார்பாக யூஸுப்-பின் உமர் ஸக்பீ என்பார், அப்போது இராக்கின் அதிகாரியாக இருந்தார்; இவர் ஜைதை எதிர்த்துப் போரிட்டார். இதன் காரணமாய் இமாம் ஜைது தோற்று, தாக்கப்பட்டு ஷஹீதானர்.

(2) தாபியீன்களில் ஒருவரான அப்துல்லாஹ் பின் ஷிஹாப் (ரஹ்) அவர்கள், இவ்வாண்டு மதீனவில் இறந்து போனர்கள்.

## ஹிஜ்ரீ-125.

(1) கலீபா ஹிஷ்ஷாம் பின் அப்துல் மலிக் அவர்கள், இவ்வாண்டு தம் 61-ம் வயதில் இறந்து போனர். இவரது ஜனஸா, புர்ராத் நதியின் ஓரம், ரஸ்ஸாபா என்ற நகரத்தின் எல்லையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

(2) காலஞ் சென்ற ஹிஷ்ஷாமின் அண்ணன் மகன் வலீத் இப்னு யஜீத் (பின் அப்துல் மலிக், இரண்டாவது வலீத்) என்பான், இவ்வாண்டு ரபீஉல் அவ்வல் மாதம், பனீ உமய்யாக்களின் 11-வது கலீபாவாக ஒப்புக் கொள்ளப்பட்டு பட்டம் சூட்டப்பட்டான்.

## ஹிஜ்ரீ-126.

(1) மேற்படி கலீபா இரண்டாவது வலீது என்பான், பதவிக்கு வந்த பின் மகா அயோக்கியனாகவும், கொடுங்கோலனாகவும், பாதகனாகவும், துர்க்கிருத்தியக்காரனாகவும், காமுகனாகவும் விளங்கினன். எனவே, பொதுஜனப் பிரஜைகளே அவனுக்கு விரோதமாகக் கிளம்பி புரட்சி செய்து அவனைப் படுகொலை செய்து கொன்று போட்டார்கள்.

(2) அவன் மாண்ட பிறகு, அவனது சிறிய தந்தையின் புதல்வனான யஜீதுன் னாகிஸ் என்பான், இவ்வாண்டு, பனீ உமய்யா அரசாட்சியில் 12-வது கலீபாவாக நியமனம் பெற்று, பதவியில் அமர்ந்தான்.

(3) இந்த யஜீதுன் னகிஸூம் 5-மாத காலம் மட்டும் கிலாபத் அரசாக்ஷி புரிந்து விட்டு, இவ்வாண்டு துல்ஹஜ்ஜு மாதம் இறந்து போய்விட்டான்.

(4) பனு அப்பாஸிய்யாக்களின் 3-வது கலீபாவாகிய மஹ்தீ பின் மன்ஸூர் என்பார், இவ்வாண்டில்தான் பிறந்தார்.

## ஹிஜ்ரீ-127.

(1) யஜீதுன் னகிஸூக்குப் பிறகு, அவனது சிறிய தந்தையின் மகனும் இவனது சகோதரனுமான இப்ராஹீம் (பின் வலீது பின் அப்துல் மலிக்) என்பார், பனுஉமய்யாக்களில் 13-வது கலீபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(2) இவ்வாண்டு மர்வான் ஹிம்மார் என்பார், ஆட்சி புரிந்து கொண்டிருந்த இப்ராஹீம் என்பவர் மீது படையெடுத்துச் சென்று தாக்கி, அவரது கிலாபத் ஆட்சிபீடத்தை கைப்பற்றிக் கொண்டு, பனீ உமய்யாக்களின் 14-வது கலீபாவாக, தானே பதவி ஏற்றுக்கொண்டு ஆட்சி பீடத்தில் அமர்ந்து கொண்டார்.

## ஹிஜ்ரீ-128.

இவ்வாண்டு அபூமுஸ்லிம் குராஸானி என்ற பெரியார், தம் குராஸானி கூட்டத்தார் அனைவரையும், பனூ அப்பாஸியாக்களுக்கு ஆதரவாளர்களாகச் செய்து அவர்களைக் கொண்ட ஒரு ஜமாஅத்தை ஏற்படுத்தினர். இந்த வகுப்பாருக்கு ஸூலைமான் பின் கஸீர் என்பார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர்களும் முஸ்லிம் சமூகத்துக்கு சேவை புரிய முன்வந்தனர்.

## ஹிஜ்ரீ-129.

இவ்வாண்டு ரமலான் மாதம், மேற் கூறப்பட்ட அபூ முஸ்லிம் குராஸானி என்பார், பரச்னு காக்கான் பிரதேசத்தில் 'ஸ்பேதன்ஜ்' என்ற ஊரில் ஆதிக்கம் பெற்று, அங்கு அப்பாஸியாக்களின் பெயரால் இளம் பிறைக் கொடியை நாட்டி, தானும் அதிகாரி என்ற முறையில் வெளிப்பட்டார். தமது கட்சியின் நோக்கமென்ன—சேவையின் கருத்தென்ன வென்பதை பகிரங்கப் படுத்தினர்.

## ஹிஜ்ரீ-130.

மிகப் பிரபல ஆலிமும் பாஜிலும் அறிஞருமான அலி பின் ஜைத் (ரஹ்) அவர்கள், பஸ்ராவில் இவ்வாண்டு இறந்து போய் விட்டார்கள்.

## ஹிஜ்ரீ-131.

(1) அபூ முஸ்லிம் குராஸானி அவர்கள், தம் இலக்ஷியத்தில் வெற்றி பெற்று, கட்சி பலத்தாலும் படை பலத்தாலும் போதியமட்டும் வன்மை யுடையவராகி விட்டார். எனவே அவர் இவ்வாண்டு, குரா

ஸானே ஆண்டுக் கொண்டிருந்த உமய்யா வம்ச அதிகாரியான நுஸர் பின் ஸையார் என்பவரை எதிர்த்துப் படை யெடுத்துச் சென்று போரிட்டு, குராஸான் பிரதேச ஆதிக்கத்தை பிடுங்கிக் கொண்டார்.

(2) நுஸர் பின் ஸையார், உயிர் தப்பினல் போதும் என்று குராஸான் ஊரையே விட்டும் ஓடிப் போனர். பாபம், தப்பிப்போன பாதையிலே செத்துப் போனர்.

(3) ஜவ்ரே என்ற ஸ்தலத்தில் காஜியாகவும் தாபிஈன்களில் ஒருவராகவும் இருந்துவந்த பெரியார் ஜுபைர் பின் அதீ என்பார், இவ்வாண்டு இறந்து போய் விட்டார்கள்.

## ஹிஜ்ரீ-132.

(1) ஜர்ராப் என்ற கடற்கரை பிரதேசத்தில், இஸ்லாமிய சரித்திரத்திலேயே, ஒரு மகாப்பெரும் தீர்க்கமான யுத்தம் நிகழ்வுற்றது. அதாவது, இவ்வாண்டு அப்பாஸிய்யா கோஷ்டியினர், ஒரு லக்ஷத்து 20 ஆயிரம் படையுடன் சென்று பெரும் போர் தொடுத்து, மர்வான் ஹிம்மார் என்ற அதிகாரியைத் தாக்கி முறியடிக்கச் செய்து, வென்று, வாகை மாலே சூடி, பனீ உமய்யாக்களின் அதிகார வர்க்கமே இனி தலே யெடுக்கா வண்ணம் அடியோடு அழித்து ஒழித்து நிரந்தர ஆதிக்கம் பெற்று விட்டனர்.

(2) மேற்படி கடும் போரில் உயிர் தப்பி ஓட்டம் பிடித்த மர்வான் ஹிம்மார் என்பார், எங்கோ போய்க் கொண்டிருக்கும் போது, நடு வழியில் அப்பாஸியாக்களின் ஆட்கள் தடுத்துக் கொன்று போட்டு விட்டார்கள் என்று சொல்லப் படுகிறது.

(3) கூபாவில் அபுல் அப்பாஸ் (முதலாவது ஸப்பாஹ்) என்பார், இவ்வாண்டு கிலாபத் ஆட்சிபார பீடத்தில் அமர்ந்து, ‘அப்பாஸியா கிலாபத்’ ஆட்சி முறையை இஸ்லாமிய சரித்திரத்தில் ஸ்தாபிதஞ் செய்து வைத்தார்.

(தொடரும்)

# ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் சரிதை

இதில் ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் பிறப்பும் குழந்தை பருவமும், அவர்கள் மௌலானா ரூம் அவர்களைச் சந்தித்ததும், இருவர்களுக்கு முள்ள சம்பந்தமும், ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்கள் கொலை யுண்டதும் விவரிக்கப் பட்டுள்ளது. அத்துடன் அவர்களின் குணாதிசயங்களும், அவர்களின் உபதேசங்களும் அடங்கியுள்ளன.

இதன் விலை நயா பைஸா. 64

# இரத்தச் சின்னம்

## இது திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த ஒரு துப்பறியும் நாவல்

சிரச்சேதம் செய்யப்படுவதினின்று சீர்கெட்ட குற்ற வாளி யொருவன் தற்செயலாகத் தப்பிப் பிழைத்திராவிடில், இரத்தச் சின்னம் என்னும் இரகசியக் குழு இயங்கத் துவங்கி இராது. நீதி பரிபாலனத்தில் பரிதவிக்கத் தக்க முறையில் நிகழ்ந்த இந்த அசம்பா விதத்துக்குச் சில வருடங் களுக்குப் பிறகு இரக்க சிந்தையற்றவனொருவன் இங்கிலாந் தில் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடலானான். தீர்க்க ஆலோசித்து திட்டமிட்டுத் திறமையோடும் தீரத்தோடும் செயலாற்றுவதன் மூலம் தனக்கு உதவியாளர்களாக ஏராள மான ஆட்களைச் சேகரித்துக் கொண்டான் அவன். ஒருவருக் கொருவர் பரஸ்பர பழக்க மில்லாமலும் அறிமுக மில்லாம லும் அதியற்புதச் செயல்கள் புரிந்த இந்த இரகசியக்குழு விற்குத் தலைமை தாங்கிய மர்ம மனிதன் இரத்தச் சின்னம் என்று கையெழுத்திட்டான்.

அவனின் மர்ம இரகசியத்தைக் கண்டு பிடித்தல் மிக ஆச்சரியமானது. இதன் விலை ரூ. 1—28

---

கிடைக்குமிடம் :—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,**
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# ஷாபிஈ மத்ஹபின் சிறப்புக்கள்.

(டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)

## 5-வது பகுதி.

### இமாம் ஷாபிஈ (ரஹ்) பொய் பேசமாட்டார்

ஹஜ்ரத் அபூ தவ்ரு அவர்கள் கூறும் சாக்ஷியமாவது :— "நான் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களை நன்கு அறிவேன். அவர்களிடத்தில் நான் அபாரமான நம்பிக்கை வைத்திருந்தேன். இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் அறிவிலும் ஆற்றலிலும், இலக்கண இலக்கியத்திலும், ஞான ஆராய்ச்சியாகிய மஃரிபத்திலும், தன்னடக்கத்திலும் சிறந்தவர்; அவர்கட்கு யாருமே இணை கிடையாது. இமாம் ஷாபிஈ (ரஹ்) ஒருபோதும் பொய் பேசியது கிடையாது. அவர்கள் வாக்கு வன்மை யுடையவர்கள்; நிர்தாக்ஷண்யமாய் நடந்து கொள்பவர்கள். எனவே அவர்களுடைய ஜீவியத்துக்கு முன்னும் அவர்களைப் போன்ற ஆளை நான் கண்டதில்லை, அவர்களுடைய மரணத்துக்குப் பின்னும் அவர்களைப் போன்ற ஓர் ஆளை நான் கண்டதும் கிடையாது" என்பதாகும்.

### இமாம் அஹ்மத் பின் ஹம்பலின் நல்லுரை

"யார் யார் கரத்தில், பேனவும் மைக்கூடும் இருக்கின்றனவோ, (அதாவது யார் யார், இஸ்லாமிய ஷரீஅத்தின் கித்தாபுகளை ஓதிப் படித்து, மார்க்கத் தீர்ப்பு-பத்வா-அளிக்கின்றனரோ) அவர்கள் மீதெல்லாம், இமாம் ஷாபிஈ (ரஹ்) உடைய நன்றியுடைமை (இஹ்ஸான்) ஏற்பட்டிருக்கிறது; எனவே என்றென்றும் கடமைப் பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; சாதாரணமாய் அரபு கல்வி பயிலும் மாணவர்களும்கூட இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுக்குக் கடமைப் பட்டவர்களா யிருக்கின்றனர்.

ஹஜ்ரத் ஜஃபரானி என்பார், இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களைப் பற்றிக் கூறுவதாவது: "உண்மையிலே ஒரு காலத்தில், ஹதீதுடைய அறிஞர்கள் உறங்கிக் கொண்டிருந்தனர்; அப்போது, இமாம் ஷாபிஈ (ரஹ்) தோன்றி, உறங்கிக் கொண்டிருந்த அவர்களைத் தட்டி எழுப்பினர். மௌனமா யிருந்தவர்கள் பேசத் தொடங்கினர்; ஆராய்ச்சிக்

கடலில் மூழ்கி யிருந்தவர்கள், நன் முத்து எடுத்துக் கொண்டு வெளியே வந்தனர்'' என்பதாகும்.

## இமாம் அபூ ஹனீபாவின் இறப்பும், இமாம் ஷாபிஈயின் பிறப்பும்

உலகத்தில் நிகழ்பெறும் காரியங்களிற் சில, விநோதமாகவும் விசித்திரமாகவும் அபூர்வமாகவும் இருப்பதுண்டு. ஒரு நிகழ்ச்சியைக் கொண்டு இன்னொரு நிகழ்ச்சிக்கு விவேகிகளால் 'உட்பொருள்' உரைக்கப்படுகிறது. ஆனால் எல்லாம் அறிந்த அல்லாஹுு தஆலா, அதில் வேறு ஏதோ நாட்டம் கொண்டிருப்பான். அதை அவனே நன்கறிவான்.

இவ்வித விநோதம், இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுடைய பிறப்பிலும், இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்களின் இறப்பிலும் ஏக காலத்தில் நிகழ்ந்துள்ளது. அதாவது, இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள் என்றையதினம் மவுத்தாகி இறந்து போனார்களோ, அன்றைய தினமே இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் 'விலாதத்' ஆகி இவ்வுலகில் பிறந்து வந்துள்ளார்கள். இதை ஆதாரமாக வைத்துக் கொண்டு ஹனபிய்யாக்களும், ஷாபிய்யாக்களும் வேடிக்கையாக ஓர் விவாதம் புரிந்து கொள்வார்கள். அதாவது: ''இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள் ஜீவித்து ஹயாத்துடனிருந்த காலம் வரை, இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் தாயாருடைய வயிற்றில் மறைந்து உலகத்தில் வந்து ஜனிப்பதற்கு அச்சப்பட்டுக் கொண்டு ஒளிந்து கொண்டிருந்தார்கள். பெரியோர்கள் இருக்குமிடத்தில் சிறியோர்கள் துணிச்சலாக வரக்கூடா தல்லவா? அதைப்போல், இமாம் ஷாபிஈ (ரஹ்) பயந்து கொண்டு, உலகில் தோன்ருதிருந்து இமாம் அபூ ஹனீபா (ரஹ்) இறந்து மறைந்தார்கள் என்று அறிந்ததும் வெளிவந்து உலகில் தோன்றினர்களாம்.

இதற்கு ஷாபிஈ மத்ஹபைச் சேர்ந்த சகோதரர்களும் வேடிக்கையாக ஒரு பதில் சொல்வார்கள். அதாவது: இமாம் ஷாபிஈ (ரஹ்) பெரிய பிரகாசச் சுடர்; இத்தீபம் வெளிப்பட்டால், இமாம் அபூ ஹனீபா (ரஹ்) என்ற சிறிய விளக்கு ஒளி மங்கி மறைந்துப் போகுமே என்று தாக்ஷண்யம் பார்த்து, போனல் போகட்டும் என்று விட்டுவைத்து இயற்கையாக அந்தச் சிறிய விளக்கு அணைந்து போன பின், இந்தப் பிரகாச ஜோதி தீபம் தோன்றியதாம்.

எல்லாம் சரிதான். அவரவரும் தத்தம் மதப் பெரியார்களைக் கண்ணியப் படுத்தி பெருமையளித்துத்தானே பேசவேண்டும். இதனுலெல்லாம் ஒரு இமாமின் கௌரவம் உயர்ந்து, இன்னொரு இமாமின் கௌரவம் குறைந்துப் போக மாட்டாது. எல்லாம் ஆண்டவனின் நாட்டப் படியேதான் நடைபெறும்.

## இமாம் ஷாபிஈ (ரஹ்) கவிதையும் பாடுவார்கள்

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் இயற்றியுள்ள (பிக்ஹு அல்லாத) பல நூல்களில், "அஷ்ஆர்" என்னும் அரபுக்கவிதைகள் (செய்யுள்கள்) மலிந்திருக்கின்றன. எனவே, இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், ஆரம்ப காலத்திலேயே கவிதை புனேயும் புலவராகவும் இருந்துள்ளார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இமாம் ஷாபிஈ (ரஹ்) பால்ய காலம் முதல் யௌவனப் பிராயத்திலும், மிக கோர்த்தியான பாட்டுக்கள், கவிதைகள் இயற்றிப் படிப்பவர்களாவே இருந்து வந்தார்கள். அப்போதெல்லாம், ஹதீது ஷரீபிலும் பிக்ஹு மஸ்அலாக்களிலும் கவனம் செல்லவே இல்லை. இமாம் அவர்கள், இந்த கவிதை இயற்றும் தன்மையை, பிக்ஹு மஸ்அலா ஆராய்ச்சியின் பக்கம் எப்படி திருப்பினர்கள்—எப்படி 'ஷாயிராக' இருந்து 'பக்கீஹாக' மாறினர்கள் என்பதற்கு, அவர்கள் ஒரு நூலில் சுயமே சுயசரிதை குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது:—

"எனக்கு ஆரம்ப காலத்தில், பாட்டு இயற்றும் பிரேமை அதிகமாக இருந்து வந்தது; சதா காலமும் கவிதைப் புனேந்துப் படித்துக் காட்டிவதிலேயே காலம் போக்கி வந்தேன். என்னே விட மேலான புலமைத் தன்மை வாய்ந்தவர், என் காலத்தில் யாருமே கிடையா தென்று பெருமை கொண்டிருந்தேன். மேலும் புலமைத் தன்மையில் ராஜா போல் விளங்க வேண்டு மென்பது விருப்பம். இதற்காகவே அனுதினமும் முயற்சி புரிந்து வந்தேன்.

"இவ்வாறிருக்கும் போது, எனக்குப் படிப்பினே புகட்டும் அரிய சம்பவ மொன்று நேரிட்டது. அதாவது: (ஒரு நாள் நான்) மக்கா ஷரீப் திருப்பள்ளி வாசலில், கஃபத்துல்லாஹ் வுடைய சுவர் அருகே அமர்ந்திருந்தேன். அப்போது என் அருகில் யாரும் வீற்றிருக்கவில்லை. தனிமையாக இருந்தேன். எங்கும் நிச்சப்தம் குடி கொண்டிருந்தது. நெடிய சிந்தனேயில் மூழ்கியிருந்தேன். அச்சமயம் என் பின்னுலிருந்து ஓர் அசரீரி வாக்கியம் தொனித்தது. "யா முஹம்மத், அலேக்க பில்பிக்ஹி, வதஃயிஷ் ஷிஃர" என்பதாகும் அது. (ஏ முஹம்மதே, பிக்ஹுடைய கல்வியை உம் மீது கடமையாக்கிக் கொள்வீராக; பாட்டு இயற்றுவதை விட்டு விடுவீராக) என்பது அதன் பொருள்.

இந்தச் சம்பவத்தையும் தெய்வீகப் படிப்பினேயையும் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், அரியதை 'அஷ் ஆர்' என்னும் சில கவிதையிலேயே இனிமையாக எடுத்துரைத்திருக்கிறார்கள். அவற்றை (அரபு பாட்டை விட்டு) கருத்துரையை மட்டும் ஈண்டு எடுத்தியம்புவோம்:—

(1) எவர்க்கட்கு, அல்லாஹு தஆலா, தாராளமான ரிஸ்கு (பணம், சொத்து, செல்வம்) கொடுத்திருக்கிறானே, அவர்கள்

ஆண்டவனுக்கு நல்ல முறையில் ஷுக்ரு நன்றி செய்வதில்லை; அவர்கட்கு கூலி கிடைத்ததேயல்லாமல், நற்பாக்கியம் கிடைக்க வில்லை.

(2) மனிதனுடைய தீவிரமான முயற்சியினால், எப்படிப்பட்ட தூர சிந்தனையான விஷயமாயினும், காரியசித்தி ஏற்பட்டு விடுகிறது. முயற்சித்தால், தூரமாயிருப்பது சமீபத்தில் வந்து விடுகிறது. நல் அதிருஷ்டம், விதிவசம் என்னும் வாசல் கதவுகள் முயற்சியினால் திறந்து கொள்கின்றன.

(3) ஒரு நல்லதிருஷ்டசாலி, ஒரு விறகுக் கட்டையை எடுத்தான்; அது பழம் நிறைந்த பசுங்கொம்பாக மாறி விட்டது என்றால் அது அதிசயப்படத்தக்க விஷயமல்ல. அது சம்பவிக்கக் கூடிய விஷயமேயாம்.

(4) ஒரு துர் அதிருஷ்டசாலி, தன்னுடைய கடுந்தாகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக தண்ணீர் கரைக்குச் சென்றான். அப்போது அது காய்ந்து வறண்டு விட்டது என்று நீங்கள் கேள்விப்பட்டால், அதுவும் ஆச்சரியப்படக் தக்க விஷயமல்ல. அதுவும் நிகழக் கூடியதேயாம்.

(5) முயற்சியினாலும் ஆலோசனையினாலுமே எல்லாக் காரியமும் சித்தியடைந்து விடுகிற தென்பது உண்மையானால், நான் வானத்தில் பறந்து சென்று, வானவிதானத்திலுள்ள நட்சத்திரத்தை பறித்துக் கொண்டு வந்துவிடுவேன். (எனவே, விதிவசம், அதிருஷ்டம் என்பது மகா உன்னதமான தத்துவமாகும். அதனாலேயே செல்வமும் சுகபோகமும் கிடைக்கின்றன. புத்திசாலித்தனமும் சுகபோகமும் வெவ்வேறு மார்க்கங்களாகும். புத்திசாலிக்கு சுகம் கிடைக்காது; சுகபோகிக்கு புத்தி இராது. இது சர்வ சாதாரணமான விஷயம்.)

(6) விதிவசத்தையே உலகில் எல்லோரும் அனுபவித்து வருகிறார்கள். புத்திசாலியானவன், நேர்மையாக நடந்து கொண்டால், அவனுக்கு கஷ்டங்களே அதிகம் ஏற்படுகின்றன. முட்டாள்களும், அக்கிரமமாக ஜீவிப்பவர்களும், ஹராமான சம்பாதனைக்காரர்களும் சதா சுகபோகமாக வாழ்ந்து வருகிறார்கள்.

(7) ஆலோசனையினாலும் புத்திசாலித்தனத்தாலும் தான் சுக போக வாழ்வு கிடைக்கிற தென்று சொல்லப்படுகிற வாதம் சரியாயிருந்தால், அறிவாளிகளும் நல்லவர்களுமல்லவா சுகபோக நல்வாழ்வில் திகழவேண்டும்? உலகப் போக்கு அப்படியில்லையே! சாதாரணமாய் உலகில் நல்லவர்கள் கஷ்டப்படுவதும், துர்த்தர்கள் சுக மனுபவிப்பதும் வழக்கமாயிருப்பதால், மதி என்னும் ஆலோசனையினால் மட்டும் பயன் இல்லை என்பதும், விதி என்னும் தெய்வச் செயலால்தான் எல்லாம் உண்டாகிற தென்பதும் ஸ்பஷ்டமாய் விளங்குகிறது.

(8) எனக்கு காலம் பல அனுபவங்களை கற்பித்துக் கொடுத்திருக்கிறது. எனக்கு எவ்வளவு அனுபவம் ஏற்பட்டதோ அவ்வளவு கஷ்டமும் பட்டிருக்கிறேன்.

(9) நான் மிகவும் கற்றுத் தேர்ந்த படிப்பாளி என்று பலர் கூறுகிறார்கள். ஆம், நான் எவ்வளவு படித்துத் தேர்ந்திருந்தும் அவ்வளவுக்கும் 'நான் ஒரு அறிவிலி' என்றே என்னை நான் கருதிக் கொண்டிருக்கிறேன். ஏனெனின், என்னைவிட மிகப் பெரும் படிப்பாளிகள் உலகில் எவ்வளவோ பேர் இருக்கலாம்.

(10) நல்ல மனிதன் எத்துணைக்கெத்துணை கல்விப் பயிற்சியில் உயர்கிறானோ அவ்வளவுக்கு அவன், பெருந்தன்மையும் தாழ்மைக் குணமும் மேற்கொள்கிறான். பழம் நிறைந்த மரக்கிளை தாழ்ந்து விடுகிற தல்லவா?

## இமாம் ஷாபிஈயின் இனிய சுபாவம்.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், சகஜமாக எல்லோருடனும் பழகும் பரஸ்பர சுபாவம் உடையவர்களா யிருந்து வந்தனர். சில ஆலிம் உலமாக்களைப் போல், சதா கடுகடுத்த முகத்துடன், கோபாவேசமாய் இருக்கமாட்டார்கள். உலகத்தை வெறுத்து எதிலும் பற்றில்லாமல் வறட்டு வேதாந்தம் பேசிக்கொண்டிருப்பரே அப்படியும் வாளா இருக்கமாட்டார்கள்—இமாம் ஷாபிஈ (றஹ்). எனவே, சிரிக்கும்போது சிரிப்பார்கள்; துக்கிக்கும்போது துக்கப்படுவார்கள்.

பிறருடன் ஹாஸ்யமாய் பேசும் சுபாவமும், உல்லாஸமாய் பழகும் பண்பும் இமாம் அவர்கட்கு இருந்து வந்தன. இமாம் அவர்களுடைய மனைவியருள் ஒருவர், குறைஷ் குலத்தைச் சேர்ந்த பெண் மணி. இவரும் பாட்டியற்றும் புலமையுடையவர். ஒருமுறை இருவரும், பரஸ்பரம் வேடிக்கையாய் காதல் உரை யாடுவதுபோல் பாட்டிலேயே பேசிக் கொண்டனர். அதாவது:—

"கடைக்கண்ணால் பார்த்து அன்பு மொழி பேசாத பெண்ணிடம் காதல் வைத்திருக்கும் காதலனுக்கு, அந்தப் பெண் ஒரு பெரிய பலா, முஸீபத்துதான்" என்று இமாம் அவர்கள் பாடினார்கள்.

"பெண்களுடைய உள்ளக் கிடக்கையைத் தெரிந்துகொள்ளாமல், பிணக்குபட்டுக் கொண்டிருக்கும் புருஷன், வீணே விசாரப்படுவார்" என்று அந்தப் பெண்மணி கூறினர்.

அதற்கு இமாம் "அப்படியானால் நானும் விசாரப் படக்கூடிய பேதையல்ல; உன் மனம் எனக்குத் தெரிந்துள்ளது" என்று கூறி மகிழ்ந்தனர்.

(தொடரும்)

# இஹ்யா உலூமுத்தீன்
# மொழி பெயர்ப்பு

புதிய இரண்டாம் பதிப்பு

(தமிழ்)

இஸ்லாமிய சன்மார்க்க ஞானப் பொக்கிஷமாய் விளங்குவது இமாமுல் மஃரிபத் வத்தரீகத் ஹஜ்றத் இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அரபு பாஷையில் இயற்றிய இஹ்யா உலூமுத்தீன் என்னும் பாரதூரமான கிரந்தம். அது மௌலவி ஆலிம்களுக்கு மதரஸாக்களில் கற்பிக்கப் படுத்துவது யாவரும் அறிந்த விஷயம். அந்த அற்புதமும் மகிமையும் வாய்ந்த இஸ்லாமிய ஞானமார்க்க நூலின் மொழி பெயர்ப்பே இந்த இஹ்யா உலூமுத்தீன் ஆகும். அரபு உர்து தெரியாத தமிழ் முஸ்லிம்களும், இஸ்லாமிய அனுஷ்டானத் தத்துவ ஞானங்களையும், இக்கித்தாபின் வாயிலாய் ஐயமறத் தெரிந்து கொள்ளலாம். இதில் ஷரீஅத், தரீகத், மஃரிபத், ஹகீகத் என்னும் நான்குவித மார்க்கங்களும் விளக்கப்பட்டிருக்கிறது. ஈமான், இஸ்லாம் அகிதா, ஹதீஸ், தலீல், முதலிய ஆதாரங்களோடு இஸ்லாம் மதானுஷ்ட சட்டதிட்ட பர்லு, ஸுன்னத்து, முஸ்தஹப்பு, மக்ரூஹ், ஹராம் முதலிய மஸ்அலாக்க ளெல்லாம் இந்நூலின் கண், மிகத் துலாம்பரமாய் விளக்கப்பட்டிருக்கிறது. இதன் பெருமை எழுதிச் சொல்லித் தெரியக் கூடியதில்லை. இந்த நூலினைக் கையில் எடுத்துப் படித்துப் பார்த்தாலே தெரியவரும்.

கெடு நாட்களுக்குப் பிறகு இந்நூல் அச்சாயிருப்பதால் பிரதிகளுக்கு ஆர்டர் தர முந்திக் கொள்ளுங்கள்.

இதன் விலை ரூ. 5—0—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

(2-வது பகுதி)




# உடல் அமைப்பின் தத்துவம்.

டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் (பாகவி)

## (5) கோழி பட்சி இனங்களின் சேர்க்கையும் உற்பத்தியும்

அருமைச் சிறுவர்களே!

மேற்கூறிய பாடங்களில், இயற்கையாக சிசுக்கள் எப்படி உற்பத்தி யாகின்றன—செடி கொடிகளில் ஆண்–பெண் சேர்க்கை எப்படி உண்டாகின்றன—மீன் தவளை இனங்களில் ஆண் பெண் சேர்க்கை எப்படி நிகழ்கின்றன என்பதைப் பற்றி சிறிது விளக்கிக் கூறினோம். அதாவது வித்துக்களி லிருந்து முளைவிட்டுச் செடி முளைப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்; ஆனால் அந்த வித்து (பீஜம்) எப்படி உண்டாகிறது? ஆண் செடியின் தாதுப் பொருள் பெண் செடியில் ஒட்டிக்கொள்வதால் அப்படி உற்பத்தியாகிறது. மீன், தவளை இனங்களும், நகர்ந்து நீந்திச் செல்லக்கூடியவைகளும் ஒன்றோ டொன்று இணைந்து, சேர்க்கை புரியக்கூடியவை இரண்டு இனங்கள் ஒன்று சேர்வதால், மூன்றாவது இனம் உற்பத்தியாவது பகிரங்கமாக நடைபெறும் ஓர் அரிய சிருஷ்டித் தத்துவமாகும்.

சிறுவர்களே!

நீங்கள் முட்டை சாப்பிடுகிறீர்களே, அது எங்கிருந்து வரு கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? "ஓ, தெரியுமே, கடையி லிருந்து வாங்கிக் கொண்டு வருகிறோம்" என்று நீங்கள் சொல்லலாம். அல்லது "எங்கள் வீட்டில் கோழி வளர்க்கிறோம்; அது உட்கார்ந்து முட்டையிடுகிறது; அதை நாங்கள் எடுத்துக் கொள்கிறோம்" என்று நீங்கள் சொல்லி விடலாம்.

அது போகட்டும். அழகான சின்னஞ்சிறு கோழிக் குஞ்சுகள் எங்கிருந்து வருகின்றன, எப்படி உற்பத்தியாகின்றன? என்பதை நீங்கள் ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறீர்களா? இல்லையே! சொல் கிறோம்; கேளுங்கள்.

187063

"ஒரு கோழிமுட்டையி லிருந்து ஒரு கோழிக் குஞ்சு உற்பத்தியாகி வெளிவருகிறது; அது பெரிதாகி, பிறகு அதுவும் முட்டையிடுகிறது"......இதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்.

சேவல் என்னும் ஆண் கோழி முட்டை யிடுவதில்லை. அது வெறுமனே, 'கொக்கரக்கோ' என்று கத்திக் கொண்டு, பெட்டைக் கோழியோடு சேர்ந்து விளையாடிக் கொண்டிருக்கும். சில சமயம் சேவலாகிய ஆண் கோழி பெட்டைக் கோழியுடன் கூடிக் குலாவுவதை நீங்கள் பார்த்து இருக்கலாம். அது தான், பெட்டைக்கோழி பிறகு முட்டையிடும் என்பதற்கு நாம் தெரிந்து கொள்ளும் ஓர் அறிகுறியாய் இருக்கிறது.

பெட்டைக் கோழியும் சேவல் கோழியும், அப்படிச் செய்வது அத்தியாவசியமாகும். இது சிருஷ்டிகர்த்தனாகிய ஆண்டவன் ஏற்படுத்திய கட்டளையாகும். கோழிகள் மாத்திரமில்லை; சின்னஞ்சிறு சிட்டுக்குருவி முதல், பெரிய பெரிய கழுகுப் பட்சிகளும் கூட இப்படிச் செய்த பின்தான் முட்டை யிடுகின்றன.

அங்ஙனம், ஆண்கோழி பெண் கோழியுடன் கூடிக் குலாவும்போது, பெண் கோழியின் உடலுக்குள் சில துளி வெள்ளை வஸ்துவை செலுத்தி விடுகிறது. அந்த வெள்ளை வஸ்து (என்னும் இந்திரியம்) பெண் கோழியின், வயிற்றுள் கர்ப்பப்பை என்னும் பகுதியில் போய் சேர்ந்துவிடுகிறது; அப்போதே பெண் கோழியின் கர்ப்பப் பையில் ஒரு 'சினை' என்னும் திரவ பொருள் உற்பத்தியாகி இரண்டும் கலந்து ஒன்றாய்க் கூடிக் கொள்கின்றன.

இவ்விதம் இந்திரியமும் சினையும் சேர்ந்து கருவாக உருக் கொண்டு வளர்கின்றன. அவை உருண்டை வடிவமாக கர்ப்பப் பையில் பெருகிக் கொண்டே போகின்றன. அந்த உருண்டை மீது ஒரு வகை ஜவ்வு போன்ற தோல் படர்கிறது. அந்த ஜவ்வுத் தோல் தான் பிறகு, வெண்மை நிறமான 'முட்டைத் தோல்' என்றாகிறது.

இங்ஙனம், பெட்டைக் கோழியின் வயிற்றினுள் (கர்ப்பப் பையில்) ஒரு தடவைக்கு (அதாவது ஒரு சூலுக்கு)ப் பல முட்டைகள் உற்பத்தியாகும். ஒரு நாளைக்கு ஒரு முட்டை வீதம், தொடர்ந்து பல நாட்களுக்கு, கோழி முட்டை யிட்டுக் கொண்டே இருக்கும். பெரும்பாலும் கோழிகள் பத்துப் பதினைந்து முட்டைகள் இட்டதும் 'அடை காக்க' உட்கார்ந்துவிடும். சில ஜாதிக் கோழிகள், தொடர்ந்து மூன்று நான்கு மாதமும் (சுமார் நூற்றுக் கணக்கில்) முட்டையிடுவதும் உண்டு.

## அடை காத்தல்:

கோழிகள் முட்டை யிட்டு முடிந்ததும் அடை காக்கத் தொடங்கி விடுகின்றன. அடைகாத்தல் என்பது:— முட்டைகளைக்

கோழி ஒரு இடத்தில் சேகரித்து, வயிறுக்குக் கீழ் நெஞ்சுடன் அணைத்து உட்கார்ந்து, தன்னுடைய உடல் உஷ்ணத்தை அந்த முட்டைகள் மீது செலுத்திக் கொண்டே இருக்கும். இதனால், அந்த முட்டைகள் உஷ்ண மடைகின்றன; இந்த உஷ்ணம் முட்டைக்குள்ளிருக்கும் வெள்ளைக் கரு — மஞ்சள் கரு என்ற பண்டங்களை உருவகப் பேதகப் படுத்தி, அதை ஒரு குஞ்சுவின் உருவமாக மாற்றி அமைக்கிறது.

முட்டைக்குள் மஞ்சள் கருவும் வெள்ளைக் கருவும், குஞ்சு உருவமாக மாறியதும், குஞ்சுக்கு உயிர் உண்டாகிறது. அதற்கு உயிர் உண்டானதும் அது பெருகிப் (பருமனாகி) வளருகிறது. உள்ளே இருக்க இடம் போதாததால், அந்தக் குஞ்சு முட்டையின் மேல் தோலை உடைத்துக் கொண்டு வெளியே வந்துவிடுகிறது. இதற்குத் தாயாகிய பெட்டைக் கோழியும் தன்னால் இயன்ற உதவி செய்கிறது.

பிள்ளைகளே!

ஆண்டவனுடைய ‘குத்ரத்’ என்னும் மகாத்மியங்களை எண்ணிப் பாருங்கள். சாதரணமாய் நீங்கள் ஓர் இரு அணு செலவு செய்து வாங்கிப் பொறித்து (அவித்து) உண்ணும் முட்டை என்னும் நல்லாகாரத்திற்கு, கோழி எவ்வளவு கஷ்டப்படுகின்றன பாருங்கள்; இது ஆண்டவன் நமக்குப் புரிந்துள்ள அருட்பாக்கியம் அல்லவா? இதற்காக ஷுக்ரு என்னும் நன்றி செலுத்த வேண்டாமா?

கோழிகளைப் போல் தான் காக்கை, குருவி, புறு போன்ற எல்லா பட்சிகளும், ஆண் பெண் சேர்ந்து, சூல் கொண்டு, முட்டையிட்டு, அடைகாத்துக் குஞ்சு பொறிக்கின்றன. கோழிகள் நம் வீட்டில் வளரும் ஜந்து வாதலால், அவை பயமின்றி எங்கேனும் முட்டை யிட்டு, எங்கேனும் ஓரிடம் அமர்ந்து, அடைகாத்து குஞ்சு பொறித்து அவைகளை வளர்க்கின்றன. ஆனால் குருவி, காக்கை, பருந்து போன்ற ஜந்துக்கள், உயரமான கிளையில் நல்ல இடத்தில் சிறு வீடு என்னும் கூடு கட்டி, அதில் முட்டை யிட்டு அடைகாத்துக் குஞ்சு பொறிக்கும். அக்காரியங்களுக்கு ஆண் பட்சியும் பெண் பட்சியுடன் துணையாக இருந்து உதவி புரியும். பெண் பட்சி தீனி உண்ண (இரை தேட) வெளியே போனால், ஆண் பட்சி கூட்டையும் முட்டையையும் அல்லது குஞ்சுகளையும் காவல் காத்துக் கொண்டிருக்கும்.

கோழிக் குஞ்சுகள் பெட்டைக் கோழியாகிய தாயுடனே சதா உலாவி, கீச்சு கீச்சு என்று கத்தித் திரியும். தாய்க்கோழி, தன் குஞ்சுகளுக்கு தரையிலிருந்து புழு பூச்சி தானியமாகிய இரையை எடுத்துத் தின்ன கற்றுக் கொடுக்கும். கோழிக்குஞ்சு முட்டையிலிருந்து

வெளி வந்த சொற்ப நேரத்தில் நடக்கத் தொடங்கி விடும். ஆனல், மரத்தில் கூடுகளில் வளரும் குஞ்சுகள் நடக்க மாட்டா; கூட்டி லேயே வளர்ந்துப் பெரிதாகி, சிறகு முளைத்து, அடித்துப் பறக்கக் கற்றுக்கொள்ளும். பறந்து கிளைக்குக் கிளை தாவி, பிறகு வெளியிடங் களுக்கும் பறந்து செல்லும். இதற்குத் தாய் பட்சி உதவி செய்து எல்லாம் கற்றுக்கொடுக்கும்.

சிறுவர்களே! சிறுமிகளே!

நீங்கள் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். கோழிக் குஞ்சுகளுக்கும் தாய் தகப்பன் (பெட்டைக் கோழி—சேவல் கோழி) உண்டு; உங்களுக்கும் தாயாரும் தகப்பனு ரும் உண்டு. அந்த ஜந்துகளைப் போல்தான், உங்கள் தாயார்—தகப் பனரும், சேர்ந்து இன்புற்று, உங்களைப் பெற்று மகிழ்ந்து சீராட்டிப் பாராட்டி, வளர்த்துப் பெரியவர்களாக்கி, படிக்க வைத்துப் பல வித்தைகள் கற்பித்துக் கொடுக்கிறூர்கள்.

பட்சியின் குழந்தைகளாகிய குஞ்சுகள், வளர்ந்து பெரிதாகிப் பறந்து செல்லவும், வேறு இடம் சென்று தீனி (இரை) தேடித் தின்னவும் கற்றுக் கொண்டதும் 'தாய்—தந்தை'யை மறந்து விடு கின்றன. ஆனல் மனிதர்க் குழந்தைகளாகிய நீங்கள் அப்படி செய் வதில்லை. தாய்—தகப்பனரின் சொற்படி நடந்து கொள்கிறீர்கள். செய்யச் சொன்னதை செய்கிறீர்கள், வேண்டாம் என்பதை விட்டு விடுவீர்கள். பெரியவர்களானலும் அம்மா—அப்பாவுடைய ஆதர விலேயே இருந்து, கல்வியும் ஒழுக்கமும் ஆசாரமும் கற்றுக் கொள் கிறீர்கள்.

பிள்ளைகளே, இப்படிச் செய்வது தான் நல்லது. மனிதர்களா கிய நாம், 'அஷ்ரபுல் மக்லூக்காத்' (சிருஷ்டி இனங்களி லெல்லாம் மிகச் சிறந்தவர்கள்). பட்சிகளுக்கும் மிருகங்களுக்கும் நான்கறிவும் ஐந்தறிவும் தான் உண்டு. 'இன்ஸான்' என்னும் மனிதர்களாகிய நமக்கு, ஆறு அறிவுகள் உண்டு. எதையும் உணர்ந்து பார்ப்பதற்கு பகுத்தறிவு உண்டு. எனவே நாம் மிருகங்களைப்போல், தாய்—தகப் பனரை மறந்து, விட்டுச் சென்று விடாமல், பெரியவர்களானலும் பெற்றோர்களுடைய சகவாசத்திலேயே இருந்து, அவர்களுக்குப் பணிவிடை புரிந்து ஆசீர்வாதம் என்னும் துஆவைப் பெற வேண்டும்.

சில பிள்ளைகள் மிருகக் குணம் படைத்தவர்களைப் போல், தாய்—தந்தையின் பேச்சை கேட்காமல், தான்தோன்றித்தனமாய், பிரிந்துச் சென்று கெட்டலைகிறூர்கள்; தாய்—தந்தைக்குப் பல கஷ்ட நஷ்டங் களையும், மனக் கவலையையும் உண்டாக்குகிறூர்கள். இதெல்லாம் கூடாது. ஆண்டவன் இப்படிப்பட்ட "நாலாயிக்" (அயோக்கியப்) பிள்ளைகளை விரும்புவதில்லை.

(தொடரும்)

# சிறைப் பறவை சிப்கத்துல்லா

அல்லது

# துப்பு துலக்கிய தூயவர்.

## 8-வது அத்தியாயம்.

மணல் பாறை மீது மோதி அவர் குட்டிக் கரணம் போட்டார். குகைச் சுவர் மீது உராய்ந்து முளி பிரழ்ந்து விட்டது; கிறீச்சிடும் சக்கரங்களை நோக்கி விழுந்தார். ஒரு சக்கரம் அவரைச் சுவர் மீது மோதி யடித்தது, முகத்தைக் கரங்களால் மூடிய வண்ணம் மூட்டை போல விழுந்தார், சட்டை சுக்கு நூருகக் கிழிந்து சிதறியது.

அவர் உயிருடன் இருந்தார். ரயில் வண்டி சென்று விட்டது. மிகக் கஷ்டத்தோடு முதலில் ஒரு காலையும் பின்னர் மற்ருெரு காலையும் அவர் நகர்த்தினர். பின்னர், சுவரை நோக்கி உருண்டு சென்று நகர்ந்து செல்லாமற் மல்லாந்து படுத்தார். அவரது ஹிருதயம் வெகு வேகமாக வேலை செய்தது. உடலில் வேதனையும் அசதியும் பரவக் கண்டார். அதிர்ச்சி அபாயகரமானது, ஆபத்து விளைவிக்க வல்லதல்லவா? சில சமயம் அதிர்ச்சியே மனிதர்களின் மரணத்துக்குக் காரண மாயிருந்திருக்கிற தல்லவா? ஹிருதயத் துடிப்பு வேகமாயிற்று. கொடிய குமட்டல் ஏற்பட்டது, பயங்கர நடுக்கம் ஏற்பட்டது அவருக்கு.

இத்தகைய நிலையில் இஞ்செக்ஷன் செய்து கொள்வது இன்றி யமையாததாகும். டாக்டர்கள் அவ்வாறு செய்திருக்கிருர்கள்; சிறையில் டாக்டர் அவ்வாறு கூறியதும் அவரது நினைவுக்கு வந்தது.

ஆனல், இஞ்செக்ஷன் செய்வதற்கு மருந்து எங்கே? எனவே, என்ன செய்வது. பத்து நிமிடங்களுக்குப் பிறகு முழங்கை கொண்டு தாங்கி கஷ்டத்தோடு உட்காரும் நிலைக்கு வந்தார். அவரது தலை சுழன்றது; ஆனல் வலிக்கவில்லை. அவரது புஜங்கள்...அவற்றை அவர் தடவிப் பார்த்துக் கொண்டார். அவை புண்பட்டிருந்தன; ஆனல் எலும்பக ளெதுவும் முறியவில்லை.

கிழிந்த கந்தையுடன் கொண்டிக் கொண்டு வந்த இளைஞரைக் கண்டதும் குகைக்கு வெளியே யிருந்த தொழிலாளி வியப்பிலாழ்ந் தான்.

"நான் கீழே விழுந்து விட்டேன். வாடகைக்கு கார் எங்கு கிடைக்கும் என்பதைச் சொல்ல முடியுமா?"

வேலே முடிந்து வீடு செல்லும் அந்த தொழிலாளி வழி காட்டி யாக இருப்பதற்குச் சம்மதித்தான். அந்த தொழிலாளியின் உதவி யுடன் தள்ளாடிக் கொண்டே சிப்கத்துல்லா ரஸ்தாவை யடைந்தார். கிண்டி குதிரைப் பந்தயத்துக்குச் சென்று விட்டுத் திரும்பும் விளை யாட்டுப் பிரியரொருவர் தனியே காரில் வந்து கொண்டிருந்தார். காரை நிறுத்தி கந்தலுடை ஆசாமியைக் கண்டதும் சந்தேகங் கொண்டா ராயினும், பின்னர், கதவைத் திறந்து சிப்கத்துல்லாவை உள்ளே ஏற்றிக் கொண்டார்.

ரயில்வே தொழிலாளியிடம் சிப்கத்துல்லா சொன்னர்: "இதோ, ஐந்து ரூபாய் யிருக்கிறது இதனை எடுத்துக் கொள். நீ செய்த உதவிக்கு இரண்டு ரூபாய்; வாய்மூடி வாளா விருப்பதற்காக மூன்று ரூபாய். இந்த சம்பவம் பகிரங்கமாகக் கூடாதென விரும்புகிறேன், உனக்குத் தெரிந்ததா? மதுபான மருந்தியதன் விளைவாக மதிமயங்கி விழுந்து விட்டேன், இதுதான் உண்மை."

அனுதாபம் கவரத்தக்க பொய்யை சொன்னர். ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டு, அந்த ஆசாமி, அவ்வாறு செய்வதாகச் சொல்லி விட்டு சென்றான்.

காரில் சிப்கத்துல்லாவை ஏற்றிச் சென்ற மனிதரும் மிக நல்லவர்; வாயாடி வம்புக்கிழுக்கும் வம்பரல்ல அவர். பந்தயத்துக்குச் செல்லு முன்பு முக்கிய சம்பவ மொன்று நிகழ்ந் திருக்கிறதெனச் சொல்லி விட்டு மேற் கொண்டு எதுவும் பேசவில்லை. குதிரைப் பந்தயம் மோசடி நிறைந்தது என்பதும் பொதுவாக ஜாக்கிகள் அனைவரும் திருடர்கள் என்பதும் அந்த ஆசாமியின் கருத்து. இந்த சொந்த அனுபவ விளக்கத்தைத் தவிர வேறு எதுவும் அவன் பேசாமையால் சிப்கத்துல்லாவும் நிம்மதியாக விருந்தார்.

வாடகைக்கு டாக்ஸிகளை விடும் கம்பெனியைச் சமீபித்ததும், கீழே இறங்கி டாக்ஸியில் சென்று விடுவதாக சிப்கத்துல்லா தெரி வித்தார்.

"இல்லை, உமது வீட்டில் கொண்டு வந்து விடுகிறேன்" என்றான் அந்த ஆசாமி.

அவனது வேண்டுகோளை வினயமாக நிராகரித்தார்.

நம்பிக்கை தொனிக்கும் குரலில் அவன் சொன்னான்: 'என், பெயர் லத்தீப். உம்மை முன்பு பார்த்திருப்பதாக எனக்கு நினைவு வருகிறது. குதிரைப் பந்தய மைதானத்தில் உம்மை நான் பார்த்திருக்கிறேனா?"

"சிறிது காலமாக இல்லை"

"இதற்கு முன்பு நான் சந்தித்த ஒரு மனிதனைப் போல இருக்கிறீர். ஆம், சிப்கத்துல்லா என்னும் பெயருடைய பொல்லாத போக்கிரியுடன் அறிமுகமாகி யிருக்கிறேன். அவன் சிறை சென்றான்......"

"ஆம், அது நான்தான்."

இதுவரை அமைதியாக விருந்த அவன் இப்போது அதிகப் பிரசங்கியாக மாறினான்.

அவனை விட்டுத் தப்பி, டாக்ஸியில் ஏறி வீடு போய்ச் சேர்ந்தார்.

வாயில் கதவைத் திறந்து வரவேற்ற பணியாள் பஹதூர்ஷா கேள்வி யொன்றும் கேட்டுத் தொந்தரவு கொடுக்கவில்லை.

"உங்களுக்காக வெளுத்த, சுத்தமான துணிகளை எடுத்து வைத்திருக்கிறேன்" எஜமானரின் அலங்கோல நிலை குறித்து மறைமுகமாக அவன் சொன்ன வார்த்தைகள் இவைதான்.

வெந்நீரில் குளித்துவிட்டு புண்களை கவனித்தார். காயங்கள் இலேசானவையாக இருந்தபோதிலும் மரணத்தின்பிடியினின்று மயிரிழையில் அவர் தப்பி வந்திருக்கிறார் என்பது திண்ணம்; உபாதையை அவரால் பொறுக்கமுடியவில்லை. அவரைத் தீர்த்துக்கட்டி விடுவதென்ற கரீம் ஷரீபின் உத்தேசம் அவருக்கு வியப்பு அளிக்கவில்லை. கரீமைப்போன்ற கயவர்கள் இம்மாதிரி செயலில் ஈடுபடுகின்றனர். சிறையில் கூட அம்மாதிரி ஆசாமிகளை அவர் கண்டிருக்கிறார். அற்ப காரணங்களுக்காகவும் ஆத்திரமேலீட்டால் ஆட்களை கொலை புரிந்து விடுவதுமுண்டு.

ஒரு சமயம் கைதி யொருவன் பெரிய பாராங்கல்லைத் தூக்கி கல் உடைப்பு வேலையி லீடுபட்டிருந்த மற்றொருவனின் மீது எறிந்ததை அவர் பார்த்திருக்கிறார். அதிர்ஷ்டவசமாக, அந்தக் கைதியின் தீய எண்ணத்தையும் செயலையும் கண்டு விட்ட வார்டர் கூச்சலிட்டார்; அந்த மனிதன் காப்பாற்றப்பட்டான். பாராங்கல்லைத் தூக்கி யெறிந்த கைதி அவனது செயலுக்கு ஒரே ஒரு சமாதானம்—சாக்கு—தான் சொல்ல முடிந்தது. அந்த மனிதன் அவனை நிந்தித்து தூஷித்து விட்டானாம்.

இத்தகைய இழிந்த மனிதர்களின் இருதயத்துக்குள் மிருக உணர்ச்சி மறைந்திருந்தது. சிப்கத்துல்லா சிந்தித்துப் பார்த்திருக்கிறார். சிலரிடம் இந்த உணர்ச்சி மேலிடுவதையும் அதன் விளைவுகளையும் அவர் நேரில் கண்டிருக்கிறார். அவரது ஆன்மாவுக்குள்கூட சில சமயம் இந்த மிருக உணர்ச்சி புகுந்து துன்புறுத்தி யிருக்கிறது.

ஸ்நான அறையிலிருந்து வெளியே வந்ததும் 'மாலிஷ்' போடுவோன் காத்திருக்கக் கண்டார். கை, கால்களை அவன் வருடிவிட்டான்; அரைமணி நேரம் இந்த உபாதையை அவர் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று.

பணியாள் பஹதுர் கொண்டுவந்த மாலைப்பத்திரிகையில் 'விபத்து' பற்றிய விவரம் எதுவுமில்லை. தனது சொந்த நலனை உத்தேசித்து அச்சம்பவம் குறித்து கரீம் ஷரீப் தகவல் அளித்திருக்க மாட்டான்.

'மாலிஷ்' போடுவோனிட மிருந்து 'விடுதலை' பெற்றதும், உடைகளை மாற்றிக் கொண்டார். "எவராவது என்னைக் காண்பதற்கு வந்தார்களா?"

"ரஜாக்கான் என்பவர் வந்தார்"

சிப்கத்துல்லா முகத்தைச் சுளித்துக் கொண்டார்.

"ரஜாக்கானா? அவர் எதற்காக வந்தார்?"

"எனக்குத் தெரியாது, எஜமான் உங்களைப் பார்க்க வேண்டுமென்றார். நடுத்தர வயதுடையவர் மெலிந்த உடலும் கவலை தோய்ந்த முகமும் உடையவராகக் காணப்பட்டார்; வீட்டில் நீங்கள் இல்லை என்று நான் சொன்னேன். ஏதாவது செய்தியிருந்தால் சொல்லுமாறு கேட்டேன். அவர் எதுவும் சொல்லிச் செல்லவில்லை."

சிப்கத்துல்லா பதில் அளிக்கவில்லை. அன்று பிற்பகல் நிகழ்ந்த சம்பவத்தையும் அல்லது மரியமின் மரணத்தையும் விட போலீஸ் இலாகாவைச் சேர்ந்த ரஜாக்கானின் திடீர் வருகை அவருக்கு அதிக கவலை அளித்தது. (தொடரும்)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# கஸஸுல் அன்பியா

## நபிமார்களுடைய சரித்திரங்கள் அடங்கியன

இதில் முதலாவது அல்லாஹு தஆலா ஆதியாய் படைத்த படைப்புகளைப் பற்றியும், 1-வது பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம், 2-வது ஷீது அலைஹிஸ்ஸலாம், 3-வது இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம், 4-வது ஹாறூத் மாறூத் தென்னும் இரண்டு மலக்குகள், 5-வது நூஹ் அலைஹிஸ்ஸலாம், 6-வது ஹூது அலைஹிஸ்ஸலாம், 7-வது ஷத்தாது கட்டின இரமதாத்துல் இமாதென்கிற சுவர்க்கம், 8-வது ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம், 9-வது இப்றூஹீம் அலைஹிஸ்ஸலாம், 10-வது இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம், 11-வது இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம், 12-வது யஃகூபு அலைஹிஸ்ஸலாம், 13-வது யூஸுப் அலைஹிஸ்ஸலாம், 14-வது ஐயூபு அலைஹிஸ்ஸலாம், 15-வது ஸில்கிப்லி அலைஹிஸ்ஸலாம், 16-வது ஷுஐபு அலைஹிஸ்ஸலாம், 17-வது மூஸா அலைஹிஸ்ஸலாம், 18-வது கிலுறு அலைஹிஸ்ஸலாம், 19-வது இல்யாஸ் அலைஹிஸ்ஸலாம், 20-வது அல்யஸஉ அலைஹிஸ்ஸலாம், 21-வது அஷ்மவீல் அலைஹிஸ்ஸலாம், 22-வது தாவூத் அலைஹிஸ்ஸலாம், 23-வது ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம், 24-வது யூனுஸு அலைஹிஸ்ஸலாம், 25-வது ஈஸா அலைஹிஸ்ஸலாம், 26-வது ஜக்கரியா அலைஹிஸ்ஸலாம், 27-வது யஹ்யா அலைஹிஸ்ஸலாம், 28-வது பீவி மரியம் அலைஹிஸ்ஸலாம் ஆக இவ்வளவு நபிமார்களுடைய கிஸ்ஸாக்களடங்கி யிருக்கின்றன. இந்தக் கிஸ்ஸாக்கள் யாவும் குர்ஆனில் பிரஸ்தாபிக்கப் பட்டவைகளாகும். இதை ஒவ்வொரு முஸ்லிமும் வாங்கிப் படிக்க வேண்டியது அவசியம்.

கலிகோ பைண்டு விலை ரூ. 9–60

ஷை அறபுத் தமிழ் ரவ்லதுல் அஸ்பியா-பீ-கஸஸுல் அன்பியா முதற் பாகம் றப்பு கலிகோ பைண்டு ரூ. 6–00

ஷை இரண்டாவது பாகம் ரூ. 7–00

ஷை மூன்றாவது பாகம் ரூ. 5–00

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# அரைவிலை! அரைவிலை!!

## மனாயிஹுல் அன்வார் பீ மதாயிஹுர் ரஸூல் வல் அப்ரார்.

இந்த கிதாபில், நமது நாட்டில் வழமையாய் ஓதி வருகிற ஸூபுஹான மௌலிது, பர்ஸஞ்சி மௌலிது, ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) மௌலிது, முஹியித்தீன் (ரலி) மௌலிது, ஷாஹுல் ஹமீது (ரலி) மௌலிது ஆக ஐந்து மௌலிதுகளும், யாஸைய்யிதி, யாகுத்பா, யாஸைய்யிதி ஷைகி, ஷபீஹுக பைத்து, கலாஸீ பைத்து, மழை பைத்து, பீஹுப்பி (ஸலவாத்து) பைத்து, கஸீதத்து ஹுஸைனிய்யா, அயாரப்பி பைத்து, ஜுத்பிலுத்பிக முனாஜாத்து, ஜிந்தா ஷாஹ் நூரிய்யா பைத்து, அபுல் ஹஸனிஷ் ஷாதிலீ (றஹ்) குத்பிய்யா, காஜா முயீனுத்தீன் (ரலி) பர்திய்யா, யாமன் யரா பைத்து, கல்வத்து நாயகம் பேரில் கஸீதா முதலியவையும் அடங்கியுள்ளன. இது பெரிய எழுத்தில் எழுதி, போட்டோ பிளாக் செய்து, கிளேஸ் காகிதத்தில் சுத்தமாய் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

விலை ரூ. 6–00

ஷை கிதாபு ஒரே நேரத்தில் 6 வாங்கினால் அரை விலையாக கொடுக்கப்படும். அதாவது ரூபா. 18–00க்கு 6 கிதாபுகள் கொடுக்கப்படும். இந்த சலுகை சொற்ப காலத்திற்கே இருக்கும். இந்த சலுகை எவ்வித முன் அறிவிப்பும் இல்லாமல் நிறுத்தப்படக்கூடும்.

---

கிடைக்குமிடம் :—

ஹாஜீ எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.